பலன் தரும் பரிகாரங்கள்

பாகம் -1




நூல் அறிமுகம்

நூலின் பெயர்	பலன் தரும் பரிகாரங்கள் (பாகம் - 1)
நூலாசிரியர்	விசு அய்யர்
முதற் பதிப்பு	2017
பதிப்பு	ஸ்ரீராம் பதிப்பகம்
உரிமை	The Sriraam Publication
பக்கம்	88
எழுத்து	11 புள்ளிகள்
கணினி அச்சு	ஸ்ரீராம் பதிப்பகம் The Sriraam Publication
வெளியீடு	ஸ்ரீராம் குழுமம் கரூர் மெயின் ரோடு, கொடுமுடி thesriraampublication@gmail.com அலைபேசி 7667745633
நன்மதிப்பு	இந்திய ரூபாயில் 90/- or USD 2/-

நூலுக்கு செலவிடும் தொகை வாழ்வை வளமாக்க உதவும் ஒரு சிறந்த முதலீடு. மற்ற கேளிக்கை செலவுகளுக்காக செய்யும் தொகையுடன் ஒப்பிடும் போது இது மிகுந்த பயனை தருவன. அதனால் மனம் நோகாமல் நல்ல நூலுக்காக பணம் செலவு செய்யுங்கள். அன்பர்களுக்கு புத்தகம் பரிசாக கொடுங்கள்.







பதிப்புரை

"உய்யும் வகை யாது ?" என வேட்கை கொண்டு கேட்டு திரியும் மக்கள் உலகம் எங்கும் உண்டு. அந்த வேட்கைக்கு விடை நமது சாத்திர மற்றும் தோத்திரங்களில் நிறைந்து கிடைக்கின்றன.

அந்த விடையை தெரிந்து கொண்டு அனைவரும் பயன் பெறும் வகையில் இக்கால வாழ்க்கை சூழலிற்கு ஏற்ப எளிய முறை பரிகார குறிப்புகளை சோதிடக்குறிப்புகளை அடிக்கோடிட்டு அமைந்துள்ளது தான், இந்த "பலன் தரும் பரிகாரங்கள்" என்னும் புத்தகம்.

இந்த புத்தகத்தின் பாகம் 1 இப்போது உங்கள் கைகளில் தவழ்கிறது. இதன் அடுத்த பாகம் தயாரிப்பில் இருக்கிறது. அது விரைவில் வெளிவரும் என்பதில் மகிழ்ச்சி தான் என்றாலும், நாகரிகமும் வசதிகளும் பெருக பெருக, பிரச்சனைகளும் பெருக தான் செய்கின்றன. இத்தனை பிரச்சனைகள் இருந்தும் அவை அத்தனைக்கும் தீர்வுகளும் சொல்லப்படாமல் இல்லை.

அதனை இந்த நூலின் ஆசிரியர் இலாகவகமாக கையாண்டுள்ளார். இந்த நூலில் உள்ள பரிகாரங்கள் அனைத்தும் பல தரப்பட்ட மக்களின் பயன்பாட்டில் பலன் தந்துள்ளது என்பதை அறியும் போது பெரு மகிழ்ச்சியாக இருக்கிறது. அதனை நூலாக வடித்து உங்களுக்கு பயன் தரும்படி அமைத்து தருவதில் ஸ்ரீராம் பதிப்பகம் பெருமை கொள்கிறது.

இந்த நூலின் ஆசிரியர் பற்றி அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தன்னை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ளாத ஒரு அன்பர் என நல்லோர் பாராட்டும் பெருந்தகையர். இவரது சிந்தனையும், மற்றவர்களை ஊக்குவிக்கும் அணுகுமுறையும் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

இந்த நூலின் அட்டைப்படத்தை பார்த்ததுமே, நமது பிரச்சனை தீர்ந்தது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தி தரும். இந்த நூலை பார்த்தாலும் தொட்டாலும் படிக்க வேண்டும் என்ற ஆவலை தூண்டும் வகையில் இந்த நூலை அழகுடனும் செம்மையுடனும் பதிப்பித்து தருவதில் ஸ்ரீ ராம் பதிப்பகம் பெருமை கொள்கிறது.

இந்த நூல் வடிவமைப்பிலும் சரி, எழுத்து பிழை திருத்தத்திலும் சரி, குறித்த நேரத்தில் வெளிவர நேரம் பாராது உறுதுணையாக இருந்த பதிப்பக ஊழியர்களை பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

படிக்கும் பழக்கம் குறைந்து விட்டதற்கு காரணம் பல உள. அவற்றுள், தொழில் நுட்ப வளர்ச்சி சமூக வலைதல வளர்ச்சி என இருக்கும் இந்த நிலையில், புத்தகங்களை வாங்கி அடுக்கி வைக்க இடம் இல்லாமை, பாதுகாக்க போதிய அவகாசம் இன்மை என்ற பல சூழலில் மக்கள் வசதிக்கு ஏற்ப இந்த புத்தகத்தினை மின் புத்தகமாக சிடி (பேழை) யாகவும் தயாரித்து தருவதில் ஸ்ரீ ராம் பதிப்பகம் தொழில் நுட்ப வளர்ச்சியுடன் வளர்ந்து வருவதில் பெருமை கொள்கிறது.

இந்த புத்தகத்தின் அடுத்த பாகம் தயாரிப்பில் உள்ளது. அது விரைவில் வெளி வரும். அன்பர்கள் இந்த புத்தகங்களை வாங்கி, பயன் பெற்று, பலன் பெற்றால் அதுவே நீங்கள் செய்யும் நன்றிக்கடனாக இருக்கும்.

அனிதா கண்ணன்.

பதிப்பாளர்.

ஸ்ரீராம் ஜோதிடம் மின்னிதழ் பதிப்பாசிரியர்
ஜோதிடர் **JVV.பொன்தாமரைக்கண்ணன்**
எண்கணித ஆராய்ச்சியாளர்,
ஸ்ரீராம் ஜோதிட கேந்திரா
கொடுமுடி 638 151
7667745633 **astrokanna@gmail.com**



அணிந்துரை

இன்றைய நவீன உலகத்தில் பல்வேறு விசயங்களில் மாற்றத்தினை சந்திக்கிறோம். ஒரு காலத்தில் மிகுந்த சிரமத்திற்கு இடையே செய்த பலவிதமான செயல்கள் காலத்தின் மாற்றத்தினால், கண்டுபிடிக்கப்பட்ட அறிவியலின் வளர்ச்சியால் இப்போது அனைத்தும் சாத்தியம் எனும் நிலையினை நோக்கி பயணிக்கிறோம்.

இருப்பினும் கூட, வெற்றி வாய்ப்புகளை பற்றியும், குடும்பத்தின் நலம், உடல் ஆரோக்கியம் பற்றியும், மனதின் ஓரத்தில் ஒரு பயம் இருக்கத்தான் செய்கிறது. அனைத்தையும் தரும் விஞ்ஞானம் இந்த விசயங்களில் செய்வதற்கு ஒன்றுமில்லாமல் ஸ்தம்பித்து நிற்பதனை காண்கிறோம்.

உலகின் அனைத்து ஆன்மீக மக்களும் இறைவனை நோக்கி செல்லுகிறார்கள். ஒரு சில கோயில்களில் தினக்கணக்கில் காத்திருந்தும் வழிபடுகிறோம். ஆனால் அனைவருக்கும் பலன் கிடைக்கிறதா ? எனும் கேள்விக்கு அனைவருக்கும் ஆம்... என பதில் கிடைப்பதில்லை.

ஜோதிட பெருமக்களும் அவரவர் அனுபவத்திற்கு ஏற்ப, நவகிரகம் சார்ர்ந்த ஸ்தலங்களை பரிகாரமாக கூறுவதனை காண்கிறோம். நானும் அனைத்து பரிகாரங்களையும் செய்கிறேன் ஆனால் பலன் தருவதாகவே காணோமே என மக்களில் சிலர் வருந்துவதுண்டு. எமது பத்தாண்டு ஜோதிட அனுபவதினில் இது போன்ற பிரச்சனைகளை கொண்ட மக்களை கண்டதுண்டு.

இந்த பிரச்சனைகளை வேருடன் களையும் பலவிதமான ரகசியங்களை இந்த நூலில் மதிப்புக்குறிய திரு. விசு அய்யர் அவர்கள் தந்துள்ளார். இதனை காணும்போது வியப்பின் உச்சிக்கே செல்கிறேன்.

இந்நூலாசிரியரின் எளிமையான தோற்றத்தினை போலவே, இந்த பரிகார குறிப்புகளும் மிக மிக எளிமையாக இருக்கும். தமிழ்வழி ஜோதிட புலமையினை நுணுக்கமாக கையாண்டிருப்பதும் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். இது ஜோதிடர்களுக்கும் கூட பயன்மிகு நூலாகும்.

பரிகாரம் என்பது பிழைப்புக்காக செய்யப்படுகிறது என, இன்றைய இளைய சமுதாயம் (சில ஜோதிடர்களும்) கூறுவதற்கு, பரிகாரங்களின் மீதான புரிதல் இல்லாததே காரணம் என்பதனை நூலினை படிக்கும் அனைவரும் முதல் கட்டுரையிலேயே புரிந்து கொள்ளுவார்கள். இறைவனின் கருணையினால் பரிகாரங்களின் பலிதம் இன்னும் அதிகமாகும்.


ஆன்மீகத்தில் ஆரம்ப நிலைக்குள் நுழைபவர் முதல், உயர்நிலையில் உள்ளவர்கள் வரை அனைவருக்கும் பொருத்தமான சக்திவாய்ந்த பரிகாரங்களை ஒருங்கே தருவதென்பது கடினமான சங்கதி. இதனை சற்றும் தொய்வின்றி விறுவிறுப்பான எழுத்து நடையில் தந்திருக்கும் விதம் அருமை.

சக்திவாய்ந்த விசயங்கள் எப்போதும் எளிமையாகத்தான் இருக்கும் என கூறுவார்கள். இதற்க்கு சிறு உதாரணம் கூறவேண்டும் எனில், இன்று அனைவருக்கும் சிக்கலை தரும் ‘கடன்’. இதனை தீர்க்கும் பரிகாரமாக கூறிய உணவியல் மற்றும் தாந்த்ரீக பரிகாரம் மூலமாக அறியலாம். எல்லா பிரச்சனைக்கும் உணவில் சிறு மாற்றம் செய்வதே போதுமென கூறும் இடங்களே எளிமைக்கு சாட்சி.

இந்த புத்தகத்திற்க்கு மதிப்புரை எழுதும் இந்த நேரத்திலேயே அடுத்த இரண்டாம் பாகம் எப்போது வரும் என, உங்களோடு சேர்ந்து நானும் காத்திருக்கிறேன். மின்னூலாக வெளிவரும் இந்த நூல்களை மொபைல், டேப்லட், கம்ப்யூட்டரில் எளிதாக கையாளலாம்.

இந்நூலினை படித்தாலே போதுமானது. படித்தவர் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் உண்டாகும். அனுபவத்துக்கு கொண்டு வருபவர் வாழ்வில் உண்டாகும் அனேகவித துன்பங்களில் இருந்து இறைவனின் கருணையால் விடுபடுவார்கள். கருத்தொருமித்து படித்து பயன் பெறுங்கள்.

மக்களின் அதிர்ஷ்ட சேவகன்



என்னுரை

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் துன்பத்தை ஏதாவது ஒரு வகையில் அனுபவிக்க நேரிடுகிறது. இந்த துன்பத்திற்கு காரணம் முன் வினைப்பயன் தான் என்பதை அறிந்தாலும் அந்த துன்பத்தில் இருந்து எப்படியாவது விடுபடவேண்டும் என எண்ணுவது இயல்பு தானே.

நோய் வந்துவிட்டால் மருத்துவரிடம் சென்று வைத்தியம் செய்து கொள்வது இல்லையா ? வினை பயன் என்று அப்படியேவா இருக்கிறோம்.

உடலுக்கு நோய் வந்த ஒருவர் மருத்துவரை தேடி செல்வது போல, வாழ்க்கை பிரச்சனையில் இருந்து விடுபட அல்லது துன்பத்தை குறைத்துக் கொள்ள ஜோதிடர்களை நம்பி செல்கிறார்கள். ஜோதிடர்களுள் சிலர் நடைமுறைக்கு ஏற்ப எளிய பரிகாரம் சொல்வதில்லை. அவற்றுள் சில பரிகாரங்கள் எல்லோராலும் செய்யவே முடியாத நிலையில் இருக்கிறது. இன்னும் சிலர் பரிகாரம் என்ற பெயரில் பணம் பறிப்பவர்களாக இருக்கிறார்கள்.

நவகிரகங்கள் இறைவனின் ஆணையை ஏற்று செய்யும் ஏவலர்கள். நம் வினைபயனை அனுபவிக்கும்படி செய்வார்களே அன்றி அவைகளை கூட்டியோ குறைத்தோ அளிக்க மாட்டார்கள். எனவே நவகிரக சாந்தி என்ற பெயரில் பிழைப்பு கருதி செய்யப்படுவன வகைகளை தவிர்த்து இறைவழிபாட்டில் ஈடுபடுத்திக் கொண்டால் ஆணை இட்ட இறைவனின் திருக்கருணையினால் பிரச்சனையை குறைத்துக் கொண்டு வினை நீக்கம் பெறலாம்.

நீங்களோ, வெளிநாட்டில் இருக்கும் உங்களுக்கு வேண்டியவர்களுக்காக நீங்கள் குறிப்பிட்ட பரிகார பலன்களை செய்யலாம் என்றாலும் அவரவர்கள் சிரத்தையுடன் மனம் ஒன்றி செய்வது தான் சிறப்பு.

இந்த நூலில் தரப்பட்டுள்ள பரிகாரங்கள் எல்லாம் எல்லோராலும் சுலபமாக செய்ய கூடிய வகையில் தரப்பட்டு உள்ளது. தெய்வ புலவர் திருவள்ளுவர்

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி

என்று அருளி செய்திருப்பது போல, விதியின் பயனை எண்ணி நோகாமல், அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்தால் வினை பயனில் இருந்து சிறிது விடுபடலாம். உறுதியான நம்பிக்கையுடனும் உரைப்புடனும் இதனை பழக்கத்தில் கொண்டு வரும் போது மாற்றம் நிகழும். அந்த மாற்றமே பரிகாரத்தின் பலன் என்பதினால் பலன் தரும் பரிகாரம் என்ற இந்த நூலினை படைக்க திருவருள் திருவுளம் அருளி உள்ளது.

இந்த கருத்தின் அடிப்படையில் "இந்த வார ஜோதிடம்" இதழில் தொடர் கட்டுரையாக வந்தவைகளை நூலாக்கி வெளியிட எண்ணம் கொண்டு ஸ்ரீராம் பதிப்பகத்தின் திருமதி அனிதா அவர்கள் விருப்பம் தெரிவித்தார். அந்த அடிப்படையில் திருமுருக பெருமானின் திருக் கருணையில் இந்த நூல் உங்கள் கைகளில் தவழ்கிறது..

நம்பிக்கையுடன் குறிப்பிட்ட பலன் கோரி செய்யப்படுமானால் சில நாட்களில் மனத்தெளிவு பெறுவதை நீங்கள் உணர்வீர்கள். கோரிய பலன்களை திருமுருகனின் திருக்கருனையினால் நிச்சயம் பெறுவீர்கள்.

இதனை படித்து பலன் பெற்று பயனடைய வேண்டுகிறேன். முருகன் அருள் முன் நிற்கும்.

அடியேன்.
விசு அய்யர்
20–09–2017

இந்த நூலை
பணம்
செலுத்தாமல்
நீங்கள்
பெற்றுள்ளவரா ?

Paytm
Accepted Here

sriraam jothida kendra

To Pay, Scan QR Code in Paytm App

India's Most Sincere Bank
Paytm Payments Bank

ஆம் என்றால்
அந்த பாவச்
செயலை நாம்
செய்ய வேண்டாமே

நூலுக்கு உரிய
தொகையை
விருப்பம் போல்
அனுப்பலாம்

Bank Account No.
286801000000995
favouring ANITHA
IFSC: IOBA0002868
அலைபேசி எண்.7667745633

உள்ளே...

1

அஷ்டமத்து சனியினால் கஷ்டமா?

ஏழரை சனி கேள்வி பட்டு இருக்கிறோம். அது என்ன அஷ்டமத்து சனி என்று கேட்கிறீர்களா ?

சரி.. ஒரு ஜாதகத்தில் சந்திரன் நின்ற இடமே ராசி என்று சொல்லப்படும். அந்த ராசிக்கு எட்டாம் இடத்தில் கோச்சார சனி சஞ்சரிக்கும் போது அது அஷ்டமத்து சனி என்று சொல்லப்படும். சர்வ நாசம் தரக் கூடியது இந்த அஷ்டம சனி.

ஏழரை சனியை விட அஷ்டமத்து சனி அதிக சிரமம் தரும் என சொல்ல காரணம்.. சனி அஷ்டமத்தில் வரும் போது சனியின் பார்வை 10ம் இடம் 2ம் இடம் மற்றும் 5ம் இடத்தில் விழுகிறது அதனால் 10ம் இடமான தொழில் ஸ்தானம் 2ம் இடமான குடும்பம் அல்லது வாக்கு ஸ்தானம் மற்றும் 5ம் இடமான பூர்வ புண்ணிய பலன்களை ஒட்டிய நன்மை தீமை தரும் நிலை என்ற நிலையில் அமைவதால் தொழிலும் குடும்பமும் வாக்கும் பாதகம் ஏற்பட்டு நிறைந்த சிரமம் ஏற்படும்.

தொழிலில் இடையூறுகள் வரும். விரும்பதாகாத இடத்திற்கு மாற்றம் வரும். தேவையில்லாமல் கடன் வாங்கவும்.. வாங்கிய கடனை அடைக்க முடியாத சூழலும் உருவாகும். உடல் நலம் பாதிப்பு அடையும். சாதாரணமாக பேசினால் கூட அது சண்டையில் போய் முடியும். குடும்பத்தில் பிரச்சனை வரும். பிள்ளைகள் சொல்படி கேட்கமாட்டார்கள்.

இப்படி என்னென்ன சொல்லலாமோ அத்தனையும் சொல்லலாம். இது எல்லாம் ஒரே சமயத்தில் வரும் என்பதால் அதன் தாக்கம் கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.

அஷ்டமத்து சனியின் மீது குரு பார்வை இருந்தால் மட்டுமே பிரச்சனைகள் குறையலாம் அதுவன்றி அனைவரும் பிரச்சனையை பொறுத்து தான் ஆக வேண்டும்..

இதற்க்கு நாம் செய்ய வேண்டியது எல்லாம், இதை தாங்கும் வலிமையை பெறுவது தான். அதற்காக தான் சில பரிகாரம் சொல்வது உண்டு. இந்த பரிகாரத்தால் பிரச்சனை தீருமா என்பதை விட அதை சமாளிக்க முடியும் என்றே சொல்லலாம்.

சரி இதற்க்கு ஆறுதலாக சில பரிகாரகங்களை சொல்லலாம். எட்டில் வரும் சனி அஷ்டமத்து சனி நான்கில் வரும் சனி



அர்தாஷ்டம சனி. இந்த இரண்டு நிலைகளிலும் உள்ளவர்கள் பரிகாரகமாக செய்ய வேண்டியவைகள் என சில சொல்கிறேன். உங்களால் முடிந்தால் அனைத்தையும் செய்யலாம்.. எவ்வளவு முடியுமோ அதை செய்யலாம். இதை சனியின் காலமான இரண்டரை வருடங்களும் செய்ய வேண்டும்.

இந்த அஷ்டமத்து சனி பெயர்ச்சி ஆன நாளில் இருந்து இரண்டரை வருடம் இருக்கும். இரண்டு மணி நேர பரிகாரம் மட்டும் பலன் தராது. இந்த இரண்டரை வருடமும் இதனை செய்ய வேண்டும்.

எனது பரிகார முறைகள் முறையே, தமிழ் மறை பாடல்கள், உணவு முறைகள் ஒழுக்க கட்டுப்பாடு, விருட்ச ஸ்பரிசம், ஆலய தரிசனம் மற்றும் சில நடை முறை பரிகாரம் என்பதாகவே இருக்கும்.

இந்த வகையில் சில எளிய எட்டு வித பரிகாரங்கள் இங்கு சொல்ல பட்டு இருக்கிறது. முயற்சி செய்து பலன் பெறுங்கள்.

வெள்ளை எள்ளை சிவக்க வறுத்து ஆறியதும் மிக்சியில் பொடித்து சாதத்தில் கலந்து சாப்பிடவும்.. மொத்தமாக பொடித்து வைத்து சாப்பிட வேண்டாம்.. அன்றைய நாள் தேவைக்கு மட்டும் பொடி செய்து பயன்படுத்தவும். உப்பு சேர்க்க வேண்டாம்.. சுவை விரும்பிகள் கொஞ்சமாக உப்பு அல்லது வெல்லம் சேர்த்து கொள்ளுங்கள். (இது 2ம் இட பார்வைக்காக)



பஞ்சமுக மூர்த்திகளை வழிபாடு செய்யுங்கள். பஞ்சமுக விநாயகர், பஞ்ச முக ஆஞ்சநேயர் பஞ்சலிங்கம், பஞ்சமுக சுப்ரமணியர் போன்ற திருமூர்த்தங்களை தரிசனம் செய்து வழிபாடு செய்யுங்கள். (இது 10ம் இட பார்வைக்காக)

சனியுடன் தாயாரும் மனைவியும் (சாயா தேவி, நீலா தேவி) இருவரும் சேர்ந்து இருக்கும் திருதலத்தலமான திருவானைக்கா சென்று தரிசனம் செய்யுங்கள்.. இங்கு தான் சிவபெருமான்

கூலியாக திருநீற்றை கொடுக்க அங்கு உழைப்பவர்களுக்கு ஏற்ப அது தங்கமாக மாறியது என்றும் வரலாறு உண்டு.. (இது சனியின் 5ம் பார்வையை சரி செய்யும்.)

தமிழ் படிப்பவர்கள் பச்சை பதிகம் எனும் ஞானசம்பந்தர் அருளிய போகம் ஆர்த்த பூண்முலையாள் என்ற திருப்பதிகம் படியுங்கள் அல்லது ஆடியோவில் கேளுங்கள். நேரம் கிடைப்பவர்கள் நள சரித்திரத்தை படியுங்கள் அல்லது படிக்க சொல்லி கேளுங்கள். (இது 2 மற்றும் 10ம் பார்வைக்காக)

வன்னி மரத்தை வலமாக வந்து வழிபாடு செய்யுங்கள். இது எதுவுமே முடியாது என்றால் பௌர்ணமி நாளில் குபேர லிங்க தரிசனம் செய்யுங்கள். முடிந்தவரை சனி பிரதோஷம் அன்று சிவ வழிபாடு செய்யுங்கள். (இது 5ம் பார்வைக்காக)

இவைகளை செய்ததால் பிரச்சனைகளை சந்திக்கும் தைரியமுடன் இருக்கலாம். ஆகா.. இது தான் தீர்வு என்று எண்ணிவிடாமல் உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஜோதிடரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

குபேர லிங்கம்

குபேர பகவான் சிரசுக்கு மேல் இரண்டு கரங்களையும் உயர்த்தி, குதிகாலை மட்டும் ஊன்றி திருவண்ணாமலையை வலம் வந்து கொண்டிருந்த போது, திருமாலும் திருமகளும் இணைந்து அருணாச்சலேஸ்வரரை சக்ரபாணி வடிவில் தரிசனம் செய்வதை கண்டார். குபேரனுக்கு சிவன் சுயம்பு லிங்க வடிவில் காட்சி தந்த இடமாகும்..

சிரமப்பட்டு சேர்த்த பணம் நிலைத்து நிற்க
குபேரலிங்க தரிசனம் செய்து வணங்குவர்.

2

தோற்றத்தில் ஒரு மாற்றம்

அதிகமான கெடு பலன்களை திரை மறைவில் இருந்து தருபவர்கள் இந்த சர்ப்பங்கள் என சொல்லும் ராகுவும் கேதுவும் தான்.

முதல் திரிகோணமான 1–5–9 என்று சொல்லப்படும் இடங்களில், சர்ப்ப கிரகம் அமைந்துவிட்டால் அது படாத பாடு படுத்தி விடும். ராகுவிற்கு சொந்த வீடும் கிடையாது. சொந்த பரல்களும் கிடையாது. அதன் இருப்பு நிலைகளை கொண்டு தான் பலனும் பரிகாரமும் சொல்ல முடியும். மேஷம், கடகம், சிம்மம், மகரம் ஆகிய ராசிகள் சர்ப்ப கிரகங்களுக்கு பகையான இடங்களாகும். ரிஷபம் நீசமான இடமாகும்.



ஜாதகத்தில் இந்த 5 இடங்களில் இருக்கும் சர்ப்ப கிரகம் இருந்தால் அதிகத் தொல்லைகள் பொறுக்க முடியாதபடி இருக்கும்.

எப்பொழுதுமே சர்ப்ப சாந்தி செய்யும் போது கவனமாக பரிகாரம் சொல்ல வேண்டும். பொறுமையாக அதனையும் செய்ய வேண்டும். இந்த நிலையில்,

1 ம் இடத்தில் இருக்கும் சர்பத்திற்கு செய்யும் பரிகாரம் 5 அல்லது 9 இடத்தில் இருக்கும் சர்பங்களுக்கு செய்வது பயன் தராது. அதனால் தான் சர்ப்ப சாந்தி செய்வது சர்ப்ப கிரகம் இருக்கும் இடத்தை வைத்து, அதனை அனுபவம் மற்றும் தெய்வாம்சம் பொருந்திய ஜோதிடர்களின் ஆலோசனை பெற்று அதனை செய்வதால் தீர்வு ஏற்படும்.

சரி.. இன்றைய நிலையில் (2016–2017–ல்) கால புருஷ தத்துவத்திற்கு 5ம் இடமாகிய சிம்மத்தில் ராகு இருக்கிறது. இது தான் இன்றைய அரசியல் சூழலில் பெறும் பிரச்சனைகளை தந்து கொண்டு இருக்கிறது என்பதை நாமும் அறிவோம்.

இதனால் பிரச்சனை ஆட்சி செய்பவர்களுக்கு மட்டும் அல்ல. அத்துடன் மக்களாகிய நமக்கும் தான். நிலையான ஆட்சியாளர் இல்லை என்றால் அதனால் வரும் சிரமம் மக்களுக்கும் தானே.

சிம்மத்தில் இருக்கும் ராகு, கால புருஷ தத்துவத்திற்கு 5ம் ராசியாக வருவதால் மக்கள் அமைதி பெறவும் குழப்பங்கள் தீரவும் எளிய பரிகாரமாக பரிந்துரை செய்கிறோம்.

புளிப்பான வஸ்த்துக்களை தானம் செய்ய வேண்டும்.. குறிப்பாக பறவைகளுக்கு தானம் செய்ய வேண்டும். எளிமையாக புரியும் படி சொல்ல வேண்டுமானால், புளி சாதம் செய்து கோழிகளுக்கு தர வேண்டும்.

கோழிகளை எங்கு போய் தேடுவது என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. அதனால் புளி சாதம் செய்து தானம் செய்யுங்கள். வீட்டில் மொட்டை மாடி வைத்து இருப்பவர்கள் ஒரு அகன்ற சட்டியில் நீர் ஊற்றி சிறிதளவு புளி இட்டு அதனை காகம் குருவி போன்ற பறவைகள் நீர் அருந்தும் படி உணவோடு வைத்து விடுங்கள். மீதமாகதபடி கொஞ்சமாக செய்து வையுங்கள்.

திராட்சை பழம் வாங்க வசதி இருக்குமானால் உலர்ந்த திராட்சையினை எளியர்வர்களுக்கு வாங்கி கொண்டுங்கள். நண்பர்களுடன் பேசி மகிழும் போது டீ காபி அருந்துவதற்கு பதிலாக திராட்சை பழ ஜூஸ் வாங்கி கொடுத்து அன்பை பகிருங்கள்.

இது எல்லோரும் செய்ய கூடிய எளிமையாக பரிகாரம். இதனை இந்த ஆண்டு முழுவதும். அதாவது பங்குனி மாதம் முடிய இதனை செய்ய வேண்டும்.

இது எதுவுமே என்னால் செய்ய முடியாது வேறு எளிமையாக ஏதேனும் சொல்ல முடியுமா என்று கேட்பவர்கள் திருஞான சம்பந்தர் அருளிய முதல் திருமுறையில் இடம் பெறும் திரு பாம்பரம் திருபதிகத்தினை தினமும் காலை—மாலை இரு வேளையிலும் படனம் செய்யுங்கள்.

சீரணி திகழ்திரு மார்பில் வெண்ணூலர்
திரிபுரம் எரிசெய்த செல்வர்
வாரணி வனமுலை மங்கையோர்
பங்கர் மான்மறி ஏந்திய மைந்தர்
காரணி மணிதிகழ் மிடறுடை அண்ணல்
கண்ணுதல் விண்ணவர் ஏத்தும்
பாரணி திகழ்தரு நான்மறை யாளர்
பாம்புர நன்னக ராரே.

அப்போ தமிழ் படிக்க தெரியாதவர்கள் அவர்கள் மொழியில் எழுதி படிக்கலாம். அல்லது தன்னுடைய “தோற்றத்தில் ஒரு மாற்றத்தை” ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கார்கோடகன் என்ற பாம்பு நளனை வாகுகன் என்ற உருவமாக மாற்றியது பற்றிய செய்தி நம் புராணத்தில் உள்ளதை நாம் அறிவோம்.

இந்த வருஷம் தமிழ் நாட்டில் கிரகணம் தெரியாது. ஆனால் நடைபெறும். இது தான் மதி விழுங்கிய பாம்பு இதனால் தான் தமிழ் நாட்டில் தொடர்ந்து பிரச்சனைகளும் குழப்பங்களும் நிகழ்கிறது.

இந்த பரிகாரம் தொடர்ந்து செய்து வர வரும் பௌர்ணமிக்குள் நிம்மதியான மாற்றம் தெரியும்.

இதை எல்லோரும் செய்ய வேண்டும்.. இத்துடன் ஆதரவு பெற்ற ஆட்சியாளருக்கு ஒரு பரிந்துரையும் சொல்கிறோம். இது அவர்கள் பார்வைக்கு சென்று மாற்றம் வந்தால் மகிழ்ச்சி.

அதிக ஆதரவு பெற்றுவரும் நம் கட்சி தலைவர் தமது தோற்றத்தில் ஒரு சிறு மாற்றத்தை ஏற்படுத்தி கொள்ளலாம். இதனால் நிலையான ஆட்சியையும் மக்களுக்கு நிம்மதியையும் தர முடியும்.

உதாரணமாக மூக்கு கண்ணாடி போட்டுக் கொள்ளலாம். அவசியம் இல்லை என்றாலும் கூட இந்த கண்ணாடி அணிந்து கொள்ளலாம். முன்னாள் முதலவர் எம்ஜிஆர் தொப்பி கண்ணாடி போட வில்லையா.

இந்த எளிய பரிகாரங்களை எல்லோரும் செய்ய வேண்டும். மக்கள் மகிழ்ச்சியும் அமைதியும் பெற வேண்டும் என்று இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.

3

அமாவாசையில் அன்னாபிஷேகம்

முக்கியமாக கவனிக்க சொல்லப்படும் தோஷங்களில் ஒன்று பித்ருதோஷம் ஆகும். பித்ருதோஷம் பரிகாரம் அறியும் முன் அந்த தோஷம் பற்றி முதலில் தெரிந்து கொள்ளுவோம்.

முன்னோர்களுக்கு செய்த பாபம் தான் இப்படி நமக்கு வருகிறது என்று பொதுவாக சொல்லப்பட்டாலும் நமக்கு ஏன் வருகிறது என்பதை தெரிந்து கொள்வோம்.

பொதுவாகவே பிரேத தோசத்தின் தொடர்ச்சி தான் பித்ருதோஷமாக அமையும். பிரேத தோஷம் பற்றி வரும் பகுதிகளில் தெரிந்து கொள்ளலாம். உடன் பிறந்தவர்களுக்கு தீங்கு செய்தாலும் கருச்சிதைவு செய்தாலும் குடும்பத்தில் துர் மரணம், தற்கொலை அல்லது கொலை இப்படி எது இருந்தாலும் கூட இந்த பித்ருதோஷம் வரும். இந்த பித்ருதோஷம் நம்மை நிம்மதியாக செயல் பட விடாது.

சரி.. இந்த தோஷம் இருந்தால் என்ன பிரச்சினை வரும் என்று தெரிந்து கொள்ளுங்கள். வேலை, கிடைக்க வேண்டிய சமயத்தில் கிடைக்காது. தொழில் முன்னேற்றம் அடையாது. எந்த முயற்சியிலும் தடை ஏற்படும். திருமணங்கள் கூடி வராது.

தீராத பிரச்சனைகளை உடையவர்கள், பிற மதத்தை நிந்தனை செய்பவர்கள், கடவுளை கேலி பேசுபவர்கள் இப்படி பலரை பித்ருதோஷம் உள்ளவர்கள் என அடையாளம் காண முடியும். குறிப்பாக சொல்ல வேண்டுமானால் 30 வயதிற்கு மேல் திருமணம் ஆகாதவர்களுக்கு இருக்கும் தோஷத்தில் முதல் வரிசையில் இருப்பது இந்த பித்ருதோஷம் தான்.

அனுபவிக்க முடியாத பெரும் கொடுமை தருவது இந்த பித்ருதோஷம். வாய்ப்புகள் இருந்தும் பயன் அடைய முடியாத நிலை ஏற்படும். இந்த பித்ருதோஷம் பற்றிய பார்வைக்கு பல நிலையில் முறை இருந்தாலும் சுலபமாக அறிய ஒரு குறிப்பு உள்ளது.

ஒருவர் ஜாதகத்தில் ஆண் திரிகோணம் என்று சொல்லப்படும் **1–5–9** மற்றும் **3–7–11** அதாவது லக்கினத்தில் இருந்து இந்த இடங்களில் சர்ப்ப கிரகம் என்று சொல்லப்படும் ராகு அல்லது கேது இருந்தால் இந்த தோஷம் உண்டு.

சூரியன் அல்லது சந்திரனுடன் இந்த சர்ப்ப கிரகங்கள் சேர்ந்து இருந்தாலும் இந்த தோஷம் உண்டு. அதன் நிலையை சரியாக அறிந்து அதற்குரிய பரிகாரம் செய்தால் மட்டுமே இந்த தோஷ நிவர்த்தி ஏற்படும். அத்துடன் தோஷ நிவர்த்தி செய்த பிறகு தோஷம் நிவர்த்தியானதா என தெரிந்து கொள்வது மிக மிக அவசியம்.

பொதுவாக சொல்வது பலரும் அறிந்த தர்ப்பணங்கள் அல்லது திவசம் செய்தல். குறிப்பாக ஆடி, தை மற்றும் புரட்டாசி அமாவாசையில் செய்யும் தர்ப்பணங்கள் மற்றும் திவசங்கள். ஆனால் இது நம் கடமை தான். தோஷ நிவர்த்தி அல்ல என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். சிலர் தில ஹோமம் பற்றி சொல்லுவார்கள் அது எல்லோருக்கும் அவசியம் இல்லை.

இன்றைய நாளில் முறையாக செய்து வைப்பவரும் இல்லை. சிரத்தையாக செய்பவரும் இல்லை. யாரையும் குறை சொல்ல முடியாது. இன்றைய கால சூழல் அப்படி இருக்கிறது.

எனது பரிகார முறைகள் முறையே, தமிழ் மறை பாடல்கள், உணவு முறைகள் ஒழுக்க கட்டுப்பாடு, விருட்ச ஸ்பரிசம், ஆலய தரிசனம் மற்றும் சில நடை முறை பரிகாரம் என்பதாகவே இருக்கும். இந்த வகையில் இதற்க்கான எளிமையான பரிகாரம் பற்றி சிந்திப்போம். முயற்சி செய்து பலன் பெறுங்கள்.

நீர் நிலையில் குறிப்பாக ராமேஸ்வரம், காசி, அலகாபாட், கயா அல்லது பாபநாசம் போன்ற நதிக்கரையில் சிரார்த்தம் செய்வது

உண்டு. இது போன்ற இடங்களில் பணத்திற்காக புரோஹிதம் செய்பவர்கள் உள்ள இன்றைய சூழலில் சரியானவர்களை தேர்வு செய்வது அவசியம்.

அமாவாசை அன்று சிவபெருமானுக்கு அன்னாபிஷேகம் செய்ய வேண்டும். வேறு எந்த கோவிலிலும் இதை செய்ய மாட்டார்கள். திருவிளமர் என்ற இடத்தில் உள்ள பதஞ்சலி மனோகர் திருக்கோயிலில் மட்டும் தான் செய்வார்கள். (ஐப்பசி அமாவசை தவிர). இங்கு சுவாமியின் திருப்பாதம் இருக்கிறது. இது தடைகளை நீக்கும்.

திங்கள் கிழமை வரும் அமாவாசையில் அதிகாலையில் அரச பிரதட்சணம் செய்ய வேண்டும். இதனை அசோம சோம பிரதட்சணம் என்று சொல்லுவார்கள். முடிந்தவர்கள் சுத்தமான தண்ணீர் கலக்காத பசுவின் பாலை இந்த விருட்சத்திற்கு கொடுக்க வேண்டும். (இது திருமண தடை மற்றும் புத்திர தடையையும் தொழில் வளர்ச்சியையும் தரும்)

அமாவாசை அன்று 7 விதமான காய்களை கொண்டு அவியல் போன்ற உணவை அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும் இதில் குறிப்பாக வாழை மற்றும் புடலங்காய் சேர்க்கப் பட வேண்டும். இதில் உப்பு இல்லாமல் அல்லது மிக குறைவாகவே இருக்க வேண்டும். (இது நம்பிக்கையை தரும்).

இதை விட சுலபமாக ஞான சம்பந்தர் அருளி செய்த திரு எழுகூற்றிருக்கையை தினமும் படனம் செய்ய வேண்டும். எனக்கு பித்ருதோஷம் இல்லை என்று ஜோதிடர் சொல்லி இருக்கிறார் என்றாலும் கூட இந்த திரு எழுகூற்றிருக்கையை தினமும் படனம் செய்ய வேண்டும்.

சிலர் உணவு பொட்டலங்களை ராமேஸ்வரம் போன்ற இடங்களில் வாங்கி கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களோ அதே பொட்டலங்களை விற்பவரிடம் கொடுத்து காசு வாங்கி கொள்கிறார்கள். உணவு பொட்டலங்களை வாங்கி கொடுத்த திருப்தியுடன் இவர் வருகிறார் ஆனால் நடந்ததோ வேறு.

அதனால் முன்பு சொன்னது போல பரிகாரம் செய்து விட்டு அப்படியே விட கூடாது. தோஷ நிவர்த்தி ஆகிவிட்டதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

எந்த தோஷத்திற்கும் பரிகாரம் உண்டு. அது இல்லை என்றால் இறைவன் கருணை அற்றவன் என்பது போல ஆகிவிடும். "எற்றெண்டு இரங்குவ செய்யற்க" என்று தான் வள்ளுவமும் சொல்கிறது. அப்படியானால் எந்த தோஷம் நிவர்த்திக்கு பரிகாரம் உண்டு..

உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஜோதிடரை அணுகி ஆலோசனை பெறுங்கள். எல்லோராலும் செய்ய கூடிய இந்த எளிய பரிகாரங்களை செய்து மகிழ்ச்சியும் அமைதியும் பெற வேண்டும் என்று இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.



4

பலன் தரும் பாதாம்

[குரு நிந்தனை தோஷம்]

தோஷம் பற்றி சொல்லும் போது சர்ப்ப கிரகங்களை நினைக்காமல் இருக்க முடியாது.

சிலர் குரு துவேஷம் செய்வார்கள். அல்லது குருவுக்கு துரோகம் செய்வார்கள். குருவை அவமதித்தல் போன்றவைகளை செய்தல், எனக்கு எல்லாம் தெரியும் என குருவை தாழ்த்தி பேசுதல் போன்றவை நிகழ்வதை நாம் பார்த்திருப்போம்.

இது போன்ற குரு துவேஷத்தால் படித்தது மறக்கும். தக்க சமயத்தில் நினைவில் வராது. பரிட்சையில் போய் உட்கார்ந்ததும் படித்தது எதுவும் நினைவில் வராது. இன்டர்வியூ வில் அறிவு இருந்தும் வெற்றி பெற முடியாத நிலை ஏற்படும்.

இதற்கு சந்திரனுடன் சேர்ந்து இருக்கும் சர்ப்பங்கள் தான். சந்திரனுடன் சேர்ந்த கிரகங்கள் சர்ப்ப கிரக சாரம் பெற்றாலும் இந்த தோஷம் உண்டு. இந்த குரு நிந்தனை முன் பிறவியில் இருந்தாலும் இதன் மூலம் வெளிப்படும்.

இதற்க்கு எளிமையான பரிகாரமாக திருகோயில் போன்ற புனித இடங்களுக்கு சென்று துர்க்கை அம்மன் அருகில் நின்று கொண்டு அங்கு இருப்பவர்கள் காலில் விழுந்து வணங்க சொல்லுவார்கள்.

திபெத்தில் லாமாக்கள் விழுந்து எழுந்த இடத்தில் மீண்டும் விழுந்து வணங்கி வலம் வருவார்கள். இதனை சிர பாதம் என்று சொல்லுவார்கள். குருவை மாணவர்கள் தேர்வு செய்வதை விட குரு தான் மாணவர்கள் தேர்வு செய்ய வேண்டும்.

சரி.. இந்த தோஷத்திற்கு என்ன பரிகாரம் என பார்க்கலாம். இதற்க்கு எளிமையான பரிகாரம் சில சொல்கிறேன். உங்களால் எது முடியுமோ அதை செய்யலாம்.

பாதாம் கலந்த உணவு. பாதாம் பாயசம் அல்லது சர்க்கரை பொங்கலில் பாதம் பருப்பு கலந்து வியாழன் அன்று விநியோகம் செய்ய வேண்டும். குறிப்பாக பாட சாலை மாணவர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

பாதாம் ஒரு மூலிகை மருந்து.. நினைவு திறனை வளர்க்கும் ஒரு அற்புத சஞ்சீவி. இது கொஞ்சம் விலை அதிகம் தான் அதை செய்ய முடியுமா என யோசிப்பவர்கள், சிர பாத எந்திரம் வாங்கி அதனை அதிகாலையில் பூஜை செய்து வர வேண்டும். தொடர்ந்து 91 நாட்கள் பூஜித்து வழி பட்டால் மாற்றம் கிடைப்பது நிச்சயம்..

காலையில் எழுந்திருப்பது சிரமம் என்று நினைப்பவர்கள் காலை கடன் முடிந்தவுடன் திருஞானசம்பந்தர் அருளிய திருகருப்பறியலூர் பதிகம் படனம் செய்யுங்கள்.

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே.

இதை விட சுலபமாக எதாவது சொல்லுங்கள் ஐயா என்று கேட்பவர்களுக்கு இன்னொரு எளிய முறை உண்டு.. அதை வீட்டில் இருந்தபடியே செய்யலாம்.. பொது இடங்களிலும் செய்யலாம். இது சித்தர் கூறிய வழிமுறை.


எட்டு நடை. அதாவது எட்டு போல குறுக்கும் நெடுக்குமாக தினமும் காலையிலும் மாலையிலும் 15 நிமிடம் நடக்க வேண்டும். சுலபமாக செய்ய இரண்டு நாற்காலி களை கொஞ்சம் இடைவெளி விட்டு எதிர் ஏதிராக வைத்து ஒரு நாற்காலி வழியாக வந்து இன்னொரு நாற்காலி வழியாக வந்தால் இந்த எட்டு நடை சுலபமாக வரும்.

இதனை செய்து வந்தால் சிர பாத தோஷம் நீங்கும் மாற்றம் வரும். வாழ்வில் நலம் தங்கும். எல்லோராலும் செய்ய கூடிய இந்த எளிய பரிகாரங்களை செய்து மகிழ்ச்சியும் அமைதியும் பெற வேண்டும் என்று இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.

ஒருவர் தினமும் 30முதல் 60 நிமிடங்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வதால் ஆரோக்கியம் மேம்படும், பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாதுக் கொள்ளலாம்.

படத்தில் இருப்பது போல் 6 அடி அகலம் மற்றும் 8 முதல் 12 அடி நீளம் அளவில் தரையில் எட்டு ஒன்று வரைந்து கொள்ளவும். அதை வடக்கு தெற்கு முகமாக வரைந்து கொள்ளவும். படத்தில் உள்ளது போல் அம்பு குறியிட்டு காட்டியது போல் இருந்து ஆரம்பித்து நடக்கவும்.

நடக்கும் பொழுது மிகவும் வேகமாகவோ அல்லது மிகவும் மெதுவாகவோ நடக்கலாகாது. மிகவும் இயல்பாக நடக்க வேண்டும்.



தினமும் காலையும் மாலையும் 15 – 30 நிமிடங்கள் நடப்பது மிகச்சிறப்பு.

நடக்கவேண்டிய நேரம் காலை அல்லது மாலை மணி 5 – 6 (am or pm).

வெளியே செல்ல முடியாதவர்கள், வீட்டுக்குள் நடக்கலாம்.

5

கடன் ஒரு சுமையா?

என்ன தான் சிக்கனமாக வாழ்ந்தாலும் கடன் இல்லாமல் வாழ முடியவில்லை இன்றைய நாளில்.. கடன் வாங்கி வாழ்வது தான் கவுரவம் என்ற நிலைக்கு எப்படியோ நாமும் தள்ளப்பட்டு விடுகிறோம்..

சில சமயம் நமது பேராசையும் இதற்க்கு துணையாக வருவது தவிர்க்க முடியவில்லை. கடன் பெறும் வாய்ப்பும் இன்றைய சூழலில் அதிகம். ஒரு முறை கடன் வாங்கி அடைத்து விட்டால் மீண்டும் பல மடங்கு கடன் தர வங்கிகளும் தயாராக இருக்கிறது.

கடன் அட்டை, (கிரிடிட் கார்டு) வண்டி கடன், வீட்டு கடன், எதையும் அடமானம் வைக்காமல் கடன் (unsecured loan) சம்பள கடன் என கடன் வகைகளும் ஏராளம். இதில் சிலர் கடன் வாங்கி பங்கு சந்தை, கமாடிட்டி சந்தை என முதலீடு செய்து தலையை கையில் வைத்திருக்கும் நிலைமையையும் நாம் அனுபவத்தில் நம் நட்பு வட்டத்தில் பார்த்து இருப்போம்.



அதெல்லாம் சரி ஐயா எப்போ என் கடன் தீரும். என்று கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கி நிற்பவர்களே...

உங்களுக்காக தான் இந்த பரிகாரங்கள்.

கடன் என்பது கொடிய விஷமே தவிர வேறில்லை. இதில் எல்லோரும் அவதிப்பட்டு கொண்டு தான் இருக்கின்றார்கள்

சனியும், செவ்வாயும் எந்த ஜாதகத்தில் இணைவு பெற்று வருகிறதோ அந்த ஜாதகத்திற்கு உரியவர்கள் ஏதாவது ஒரு வகையில் கடன் சுமையை தலையில் வைத்து கொண்டாடுவார்கள். சனிக்கு கேது இணைவு பெற்று இருந்தாலும் கடன் தொல்லை ஏற்படும். 6 ம் அதிபதியுடன் சூரியன் எந்த விதத்தில் தொடர்பு பெற்றிருந்தாலும் ஜாதகர் ஒருமுறை கடன்பட்டால் ஆயுளுக்கும் கடன் காரறாகவே இருப்பார்கள். சிலர் கடன்காரர்கள் ஆகவே இருக்க வேண்டியவர்கள்.

சிலருக்கு தவறான முடிவுகளால் கடன் வரும். சிலருக்கு அடுத்தவர்களுக்காக பணம் வாங்கி கொடுப்பதால் கடன் வரும். சிலருக்கு வசதிகளை பெருக்கி கொள்ள கடன் வரும். இன்னும் சிலருக்கு கடனை வாங்கி கடனுக்கு விட்டு அவர் திருப்பி தர முடியாததால் கடன் வரும். சிலர் கடன் வாங்கி முதலீடு செய்து அதனால் பணம் மற்றும் அசல் எடுக்க முடியாமல் கடன் வரும்.

நமக்கு தெரிந்து சிலர் பூ விற்பவர் காய் மற்றும் பழம் விற்பவர்கள் எல்லோரும் பாருங்கள் அதிக வட்டி கொடுத்து கடன் வாங்கி மீதும் கடனிலேயே விழுவார்கள்.

அதனால் முதலில் எதனால் கடன் தொல்லை வந்தது என்பதை அறிந்து அதற்குரிய பரிகாரம் சொல்ல வேண்டும்.அப்போ தான் கடன் நிவர்த்தி ஏற்படும். எல்லா கடனுக்கும் ஒரே மாதிரி பரிகாரம் செய்ததால் அமைதி கிடைக்கலாம் நிவர்த்தி கிடைக்குமா என்பதில் தான் குறிப்பு உள்ளது.

இங்கு எல்லாவிதமாக கடன்களுக்குமான சில எளிய பரிகாரம் சொல்கிறோம். முடிந்தவர்கள் முடிந்ததை செய்யலாம். குறிப்பிட்ட சில நாட்களில் கடன் வாங்கியவரிடம் ஒரு சிறு தொகையாகவாவது திருப்பி தர வேண்டும். கிரிடிட் கார்டுக்கு பணம் செலுத்த இப்போ ஆன்லைன் வந்ததால் இரவு பகல் எனும்

தொல்லை இப்போ இருக்காது. இதில் குறிப்பிட்ட அனைத்து நேரத்தினையும் சிறப்பாக பயன் படுத்தலாம்.

மைத்ரா முகூர்த்தம் என்று சொல்லப்படும் அஸ்வினி நட்சத்திர நாளில் மேஷ லக்னம் வரும் வேளையிலோ, அனுஷ நட்சத்திரம் வரும் நாளில் விருச்சிக லக்னம் வரும் வேளையிலோ, இந்த கணக்கு தெரியாதவர்கள் நவமி திதி, வரும் செவ்வாய் கிழமையிலோ சதுர்த்தி திதி வரும் ஞாயிறு கிழமையிலோ, குளிகை நேரத்தில் அல்லது எந்த நாளிலும் செவ்வாய் ஓரையில் அல்லது வளர் பிறை சதுர்த்தியில் அல்லது புதன் கிழமை புதன் ஓரையில் இப்படி சொல்லப்பட்ட எந்த நாள் உங்களுக்கு வசதியாக இருக்குமோ அந்த நாளில் அவர்களுக்கு அந்த நேரத்தில் சிறிய தொகையையாவது திருப்பிக் கொடுக்க வேண்டும்.

ரொம்ப டெக்னிகலா இருக்கு சார்.. கொஞ்சம் ஈசியா சொல்லுங்க என்பவர்களுக்காக இந்த எளிய முறை பரிகாரம். பாம்பன் சுவாமிகள் அருளிய "சதுரங்க பந்தம்" முதல் நாள் ஆறு முறை படியுங்க.. தொடர்ந்து காலையும் மாலையும் 27 முறை படியுங்கள். இந்த சதுரங்க பந்தத்தை பையில் மற்றும் பண பெட்டியில் வைத்துக் கொள்ளுங்கள். இது தொழில் முறை கடனில் இருந்து நம்மை உறுதியாக மீட்டு தரும்.

உணவில் தக்காளியை முற்றிலும் தவிர்த்து விடுங்கள். தொக்கு சூப் இப்படி எந்த வடிவிலும் தக்காளி இருக்க கூடாது. சுரைக்காய் பீர்க்கங்காய் இவைகளை காலையில் தோல் நீக்கி பச்சையாக சாலட் செய்து சாப்பிடுங்கள். இத்துடன் வெண்டைக்காய் சேர்த்துக் கொள்ளுங்கள். கோதுமை அரைக்கும் போது சில துளசி இலைகளை சேர்த்து அரைத்து சப்பாத்தி செய்து சாப்பிடுங்கள்.

பச்சை பயறு உங்கள் வசதிக்கு ஏற்ப கொஞ்சம் எடுத்து இரவில் படுக்கும் போது தலையணைக்கு அடியில் வைத்து உறங்குங்கள். காலையில் அதனை கடல் அல்லது ஆறு இவைகளில் எரிந்து விடுங்கள். இதனை ஒவ்வொரு கிருத்திகையின் போதும் செய்ய வேண்டும்.

இது எதுவுமே செய்ய முடியாது என்பவர்கள் புதன் கிழமை அதி காலையில் ஐவ்வரிசியை ஒரு கைப்பிடி எடுத்து வீட்டு வாசலில் வெளியே எரிந்து விடுங்கள்.

திருஞானசம்பந்தர் அருளிய வேத வேள்வியை நிந்தனை செய்து என தொடங்கும் திருப்பதிகத்தை .தினமும் காலை மாலை இருவேளையிலும் படனம் செய்யுங்கள். வைணவர்களாக இருந்தால் ருன விமோச்சன சுலோகம் நரசிம்மரை நினைத்து படனம் செய்யுங்கள்.

வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்

ஆதம் இ(ல்)லி அமணொடு தேரரை

வாதில் வென்று அழிக்கட் திரு உள்ளமே?

பாதி மாது உடன் ஆய பரமனே!

ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-

ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

திருகோயில் வழிபாடு செய்ய வாய்ப்பு உள்ளவர்கள் தவறான முடிவுகளால் கடன் தொல்லையில் இருப்பவர்கள் பாச்சிலாசிரமம் சென்று வரவும்.

தேவைக்கு வாங்கி தீர்க்க முடியாத நிலையில் தவிப்பவர்கள் திருவாரூரில் உள்ள ருன விமோசனரை திங்கள் கிழமை ஆதிரை நாள் வரும் திங்கள் கிழமையில் வலம் வாருங்கள்.

அடுத்தவருக்காக உதவி செய்து கடன் சுமையில் இருந்தால் சுவாமிமலை திருக்கோயிலில் முருக பெருமானுக்கு வைரவேல் சார்த்தும் நாளில் தரிசனம் செய்து வேல் அர்ச்சனை செய்யுங்கள்.

எதனால் உங்களுக்கு கடன் சுமை அதை தீர்க்க என்ன வழி என உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஜோதிடரை அணுகி ஆலோசனை பெறுங்கள். எல்லோராலும் செய்ய கூடிய இந்த எளிய பரிகாரங்களை செய்து மகிழ்ச்சியும் அமைதியும் பெற வேண்டும் என்று இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.

6

திருமணத்தை நடத்தி தரும்

கல்யாண விரதம்

திருமணம் என்பது வாழ்வில் திருப்பு முனையை ஏற்படுத்தும் நிகழ்வு தான். அதுவும் உரிய காலத்தில் அமைந்து விட்டால் அதன் மகிழ்ச்சியே அலாதி தான். அந்த வாழ்க்கை துணையும் ஒத்திசைந்து அமைந்து விட்டால் இன்னொரு சொர்க்கம் வேண்டுமா? மனிதப் பிறவியின் முயற்சியே இல்லறத்தில் இருந்து நல்லறம் செய்தல் ஆகும். ஒவ்வை பாட்டியும் “இல்லறம் இல்லையேல் நல்லறம் ஏது?” என்று கேட்பார்.

சில கிரகங்களின் மாறுபட்ட சேர்க்கையினாலும், சாதகமான கோச்சாரநிலை இல்லாததாலும், நன்மை செய்ய கூடிய தசா, புத்திகள் அமையாததாலும், திருமணம் தாமதமாகும். அதை விட குறிப்பாக கால சர்ப்ப தோஷம், தார தோஷம், மாங்கல்ய தோஷம், ஸ்திரீ தோஷம் போன்றவை தோஷ நிவர்த்தி செய்யாமல் நிறைவான வாழ்வு கிடைக்காது.

இவர்களுக்காக தான் இந்த பரிகார குறிப்புகள். எல்லோராலும் எளிமையாக செய்ய கூடிய பரிகாரம் என்பதால் அதனை மனம் ஒன்றி நம்பிக்கையுடன் செய்தால் நிச்சயம் பலன் உண்டு என்பதை உறுதியாக சொல்லலாம். திருமண தடை அல்லது இரு மண யோகம் இருவருக்குமே உண்டு. இந்த பரிகார குறிப்பில் பெண்களுக்கான திருமண தடை நீங்க ஆலோசனைகள்

சொல்ல பட்டிருக்கிறது. இதனை ஆண் பெண் இருபாலரும் செய்யலாம்.

ஒருவருடைய லக்னத்தில் இருந்து 8–ஆம் இடம் தான், மாங்கல்ய ஸ்தானம். இந்த இடத்தில் சூரியன், செவ்வாய், சனி மற்றும் சர்ப்ப கிரகங்கள் இருப்பது ஆரோக்கியமானது அல்ல. இது பெண்ணிற்கு மட்டுமல்ல, ஆணிற்கும் நல்லதல்ல. சில விதி விலக்காக குரு பார்வை சொல்லப்பட்டாலும், தோஷ நிவர்த்தி அவசியம் செய்யப்பட வேண்டும். நிம்மதியான நிறைவான வாழ்வு அப்போது தான் அமையும்.

திருமண பேச்சுக்கு தொடங்குவது, பொருத்தம் பார்ப்பது, தோஷ சாம்யம் பார்ப்பது, முகூர்த்தம் குறிப்பது, இப்படி ஒவ்வொரு நிலையிலும் சரியாக அமைந்து விட்டால் அவர்கள் வாழ்வு சிறப்பாக அமையும். இல்லையேல் வெளிநாட்டில் பிரிந்து தனியாக வாழ்தல், விவாகரத்து மறுமணம், துனையை இழப்பது இப்படி பலவும் நிகழும். இதை பற்றி சொல்லவே ஒரு தனி மெகா தொடர் வேண்டும்.

மேற் சொன்ன தோஷத்தால் வரும் தடைக்கான பரிகார குறிப்புகளை பார்க்கலாம். மற்ற வேறு தோஷங்களுக்கு தனித்தனியாக கூடுதல் பரிகாரம் செய்ய வேண்டியது அவசியம்.

“கல்யாண விரதம்” என போற்ற படுகின்ற “பங்குனி உத்திர விரதம்” இருந்தால் மாலை சூடும் வரனை தேடி தரும் அற்புதமான பரிகாரம். இந்த உத்திர நாளில் வள்ளி குஞ்சரி மனவாளனுடன் உள்ள முருகனை வழிபட சடுதியில் திருமணம் நடக்கும்.

இது ஆண்டுக்கு ஒரு முறை தான் வரும். அதனால் அடுத்து வரும் பங்குனி உத்திரத்தை விட்டு விட்டால் அடுத்த ஒரு வருடம் வரை காத்திருக்க வேண்டும். பிள்ளை பேறு தருவது சஷ்டி விரதம் என்றால் மண வாழ்வை கூட்டி வைப்பது “கல்யாண விரதம்” எனும் பங்குனி உத்திர விரதம்.

வசதி வாய்ப்பு உள்ளவர்கள் பங்குனி உத்திரத்தன்று முருக பெருமானுக்கு திருமண வைபவத்தில் உங்கள் பங்களிப்பை கொடுங்கள். முடியாதவார்கள் திருமண நிகழ்வுகளை கண்டு

வேண்டுதல் செய்யுங்கள். முக்கியமாக சுவாமிக்கு மாம்பழத்தை படைக்க வேண்டும். இதை கவனத்தில் வைக்கவும். படைத்த மாம்பழத்தை மணவாழ்க்கை எதிர் நோக்கி காத்திருப்பவர்கள் சாப்பிடவேண்டும். அது தான் அவர்களுக்கு அன்றைய உணவு. என்னுடைய தாயார் சுவாமியின் ஒவ்வொரு ஆண்டும் திருக்கல்யாணத்திற்கு சீர் வரிசை வைப்பார்கள். அத்தனை சிறப்பு பெற்றது இது.

தார தோஷம் உள்ளவர்கள் திருபைஞ்ஞிலி திருத்தல பெருமானை தரிசித்து வழிபட வேண்டும்.. இந்த திருத்தலத்தில் எமனுக்கு தனி சன்னதி உண்டு. இங்கு நவ கிரகமே கிடையாது.. இது பற்றிய குறிப்பை பின்னர் பகிர்கிறேன்.

ஸ்திரீ தோஷம் உள்ளவர்கள், பஞ்ச மங்கள தலம் என்ற சிறப்பு பெற்ற திரு மங்கலக்குடி அம்பாள் மங்கலாம்பிகையை தரிசிக்க வேண்டும். இந்த தாயார் கழுத்தில் உள்ள திருமாங்கல்யம் வரன் வேண்டி நிற்பவரின் கண்களுக்கு தெரியும்படி இருக்க வேண்டும். குருக்களிடம் கொடுக்க வேண்டியதை கொடுத்தால் திருமாங்கல்யத்தை காண்பித்து கொடுப்பார். கார்த்திகை மாதம் ஞாயிறு அன்று தயிர் சாதம் நிவேதனம் செய்து அதை மட்டுமே அன்று உணவாக கொள்ள தோஷ – நோய் நீங்கும்.

சர்ப்ப தோஷத்தால் திருமண தடை உள்ளவர்கள். திருமணஞ்சேரியில் உள்ள கல்யாண சுந்தர பெருமானுக்கு மாலை சாற்றி சர்ப்ப சாந்தி செய்ய வேண்டும். இங்கு திருமண பிரார்த்தனை மண்டபத்தில் பிரார்த்தனை செய்து உப்பு சர்க்கரை சேர்க்காமல் இங்கு தரும் எலுமிச்சை பழத்தை பிழிந்து அருந்த வேண்டும். திருக்கோயிலில் தரும் மாலையயை பத்திரமாக வைத்திருந்து மணம் முடிந்தவுடன் தம்பதிகளாக வந்து இறைவனுக்கு நன்றி சொல்லி பிரார்த்தனையை பூர்த்தி செய்ய வேண்டும்.

இத்தனை தூரம் போக வேண்டுமா.. ? இதை விட வீட்டில் இருந்தபடி செய்ய சுலபமாக ஏதும் சொல்ல கூடாதா என்று

கேட்பவர்களுக்காக இது. திருஞானசம்பந்தர் அருளிய பதிக பாராயணம்.

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே

என்ற திருப்பதிகத்தை தினமும் காலையிலும் மாலையிலும் படனம் செய்ய வேண்டும். ஆடியோ கூட கிடைக்கிறது.. அதனையும் தொடர்ந்து கேட்டு வந்தால் சுலபமாக மனப்பாடம் ஆகிவிடும்.

உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஜோதிடரை அணுகி ஆலோசனை பெறுங்கள். இந்த ஆண்டு திருமண வாழ்வு வேண்டி காத்திருக்கும் அனைவருக்கும் விரும்பிய வரன் கிடைக்க பெற்று வாழ்வில் எல்லா நலனும் கிடைக்க இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.



7

வறுமை நீக்கி வளமை சேர்க்கும்

வேலன் வழிபாடு

நானும் ஓடி ஓடி உழைக்கிறேன். வாழ்க்கையில் முன்னேற்றமே இல்லை என வருந்துபவரா நீங்கள்? அப்படியானால் உங்களுக்கு தான் இந்த இந்த பரிகாரம்.

ஒரு சில நொடிகளில் ஏற்படும் அதிசயங்கள், வாழ்க்கையை புரட்டிப்போட்டு விடுகிறது. நீங்கள் என்னதான் முயன்றாலும், அது சரியான நேரம் வரும் போது தான் நமக்கு சாதகமாக அமையும்.

வறுமைக்கு காரணம் எதுவாக இருந்தாலும் வளமைக்கு நாம் எடுக்கும் முயற்சிகள் மட்டும் தான். ஆனாலும் நம் உண்மையான முயற்சிகள் கூட வெற்றியை சில சமயம் புரட்டி போட்டு விடுகிறது.


நாளை பதவி கிடைக்கும் என்ற நிலையில் இன்று வேறு இடத்தில் வாசம் கிடைத்து விடுகிறது. கையில் உள்ள பேட்டரி விளக்கை இருட்டு அறையில் செல்லும் போது பொருத்தாமல் இருந்தால் எப்படி வெளிச்சம் கிடைக்கும். அப்படித்தான், முயற்சிகள் இருக்கும் போது அதற்குரிய வழிபாட்டையும் செய்தால் மட்டுமே வாழ்க்கையில் வளமை என்ற வெளிச்சம் கிடைக்கும்.

தாலிக்கு தங்கம் வேண்டும். வளமை கூட வேண்டுமானால் தங்கம் சேர வேண்டும். தங்கம் முதலீடு அல்லது பாதுகாப்பு என்று இன்னமும் மக்கள் நினைப்பது உண்டு. அக்ஷய திருதியைக்கு ஒரு கிராம் தங்கமாவது வாங்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் இப்பவும் உண்டு. தங்கத்தின் விலை கூடினாலும் அதன் மோகம் குறைவதில்லை. ஆன்லைன் வர்த்தகம் செய்பவர்கள் கூட ஈ–கோல்டு வாங்கி விடுகிறார்கள்.

குரு சந்திரன் சேர்க்கையில் உள்ளவர்கள் தங்கம் போன்ற அசையும் சொத்துக்கள் சேர்ப்பார்கள். எனக்கு இப்படி இல்லையே ஆனால் இத்தனை கிலோ அசையும் சொத்துக்கள் இருக்கிறதே என நினைப்பவர்கள் இந்த சேர்க்கை காலங்களில் சேர்த்து இருப்பார்கள்.

சுக்கிரன் இணைவு ஆபரண தங்கத்தையும், செவ்வாய் இணைவு 18 அல்லது 20 கேரட் போல தரம் மாறிய தங்கத்தையும் குறிக்கும். வெள்ளி சேரும்போது தங்கம் சேரும் என்றாலும் உலோக பயன்பாட்டிற்கு முன்நிற்பது இரத்தினங்கள் தான் என்பதில் மாற்று கருத்து இல்லை. அதனால் தான் முன்னோர்கள் குழந்தைகளுக்கு பிறந்த ஐந்தாவது நாளில் தங்கம் போட வேண்டும் என்ற பழக்கம் இருந்தது. ஐம்படை தாலியும் அரசிலை தாலியும் அணியும் பழக்கம் முன்பு தமிழரிடம் இருந்ததை சங்க இலக்கியங்கள் சொல்கிறது. நம்மில் பலர் அதையெல்லாம் மறந்து விட்டோம் என்றாலும் வாழ்வில் வளமை சேர்க்கும் வேலன் வழிபாட்டை தெரிந்து கொள்வோம்.

மனம் வாக்கு காயம் இவற்றால் செய்ய கூடியதே வழிபாடு. செந்தூர் முருகனை மனத்தால் நினைத்தாலே போதும். பழனி முருகனை வாக்கால் துதித்தால் போதும். தணிகை வேலனை



உடலால் வழிபட வேண்டும். என்ற நிலையில் அறுபடையில் முதல் வீடாக அமைந்துள்ள திருப்பரங்குன்றம் வழிபாடு தான் செல்வ வளத்தை தங்க வைக்கும் சிறந்த வழிபாட்டு பரிகாரம்.

திருப்பரங்குன்றம் செல்ல வசதி வாய்ப்பில்லை அல்லது நேரம் இல்லை என நினைப்பவர்கள் வீட்டில் இருந்த படி செல்வ வழி பாட்டிற்கு என்று அமைந்ததே

பாம்பன் சுவாமிகள் அருளிய ''தங்க ஆனந்த களிப்பு'' என்ற திருப்பதிகம். பத்து பாடல்களை மட்டும் கொண்ட இந்த திருப்பதிகத்தை முழுவதும் முறையாக வழிபாடு செய்தால் நிச்சயமாக பொன் சேர்க்கையும் செல்வ வளமும் உண்டாகும்.

சுயமான தங்கம் இட் தங்கம்

சிவசுப்ரமணியன் எனும் தெய்வ தங்கம்

அந்தரர் வேண்டொரு தங்கம் ஈறில்

அருசிக ரக்கிரி நின்றெழு தங்கம்

சுந்தரமாய் சுடர் தங்கம் உமை

துங்க மலர்க்கரந் தங்கொரு தங்கம்

என ஒவ்வொரு பாடலிலும் குமரக்கடவுளை ''தங்கம்'' என்றே துதிக்கிறார் பாம்பன் சுவாமிகள்.

இப்பாடலானது ஒருவரது ஜாதக தோஷத்தினை அடியோடு அழித்து பெரும் செல்வத்தினை தரக்கூடியது. இதனை தொடர்ந்து பாராயணம் செய்து வந்தால் வீட்டில் பொன் ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். பெரும் செல்வ யோகம் உண்டாகும். இதை பாராயணம் செய்பவர்களின் இல்லங்களில் திருமகளின் வாசம் நிரந்தரமாக இருக்கும்.

முதன் முதலில் ஆரம்பிக்கும் போது கார்த்திகை நட்சத்திரம் அல்லது விசாகம் நட்சத்திரம் அல்லது வளர்பிறை சஷ்டி அல்லது செவ்வாய்க்கிழமை வரும் நாளில் குரு ஓரையில் அருகிலுள்ள முருகன் ஆலயத்தில் அல்லது வீட்டில் ஐந்து எண்ணெய் (கடையில் விற்பதை வாங்குவதை விட நீங்களே தனி தனியாக வாங்கி சேருங்கள்) ஊற்றி திரியிட்டு நான்கு அகல் விளக்குகள் ஏற்றிட வேண்டும். அதில் இரண்டு தீபங்கள் வடக்கு நோக்கியும், மற்ற இரண்டில் ஒன்று கிழக்கு முகமாகவும் மற்றொன்று மேற்கு முகமாகவும் எரிய வேண்டும். இதனை முறைப்படி குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொடர்ந்து படிக்கையில் செல்வ வளம் உறுதியாகும்.

எனக்கு படிக்க தெரியாது இதை விட சுலபமான வழி இருக்கா என கேட்பவர்களுக்காக அடுத்த கட்டுரைகளில் பணம் தங்கவும் செல்வ வளம் பெருகவும் சில பயிற்சி பரிகாரம் பற்றி பகிர்ந்து கொள்கிறேன். வாசகர்கள் அனைவரும் செல்வ வளம் கிடைக்க பெற்று வாழ்வில் எல்லா நலனும் பெற திருமுருகன் திருமுன் வேண்டுகிறோம்.

8

கும்பிட வேண்டிய குல தெய்வம்

குல தெய்வ பிரார்த்தனையை தவிர்த்து விட்டு வேறு எந்த பிரார்த்தனை செய்தாலும் அதில் முழு நிறைவு கிடைப்பதில்லை. குல தெய்வ பிரார்த்தனை மற்றும் அவர்களை திருப்தி செய்யாமல் வேறு எந்த பரிகாரம் செய்தாலும்கூட அதனால் முழு பயனும் அடைய முடியாது.

அதனால் சிலர் நானும் எல்லா பரிகாரமும் செய்துவிட்டேன் ஐயா, ஆனால் பாருங்கள் இந்த கஷ்டம் தீர மாட்டேன் என்கிறது என்பார்கள். அதற்கு ஒரே காரணம் குல தெய்வங்களை திருப்தி படுத்தாமல் செய்யும் முறையற்ற வழிபாடுகளே தான்.

குல தெய்வம் என்பது நம் முன்னோர்களால் வணங்கப்பட்ட தெய்வங்கள். குல தெய்வம் வழிபாடு செய்யும் போது நாம் முன்னோர்களையும் ஒரு வகையில் திருப்தி அடைய செய்கிறோம் என்பதை குல தெய்வ வழிபாடு செய்பவர்கள் உணர்வார்கள்.

ஒரு திருமண விழாவில் பங்காளிகளை மதிப்பதால் கிடைப்பது என்ன ? மதிக்காமல் மரியாதை செய்யாமல் இருப்பதால் கிடைப்பதால் என்ன ? என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். அப்படித்தான் இதுவும்.

சரிங்க ஐயா. எனக்கு எது குல தெய்வம் என்றே தெரியவில்லை. நானே ஒரு தெய்வத்தை வைத்து வழிபாடு செய்கிறேன் இது சரியா என சிலர் கேட்பார்கள்.

தெய்வம் கடவுள் இறைவன் என பகுத்து தெளிவாக தந்து உள்ளது நம் தமிழர் பண்பாடு. இதனை சரியாக புரிந்து

கொள்ளாமல் ஒரு சிலர் எல்லாவற்றையும் ஒன்றாக குறித்து சொல்லுவார்கள். சிலர் கடவுள் இல்லை என்றும் சொல்லுவார்கள். அவர்கள் கூட குல தெய்வ அல்லது இஷ்ட தெய்வ வழிபாட்டை விடுவதில்லை.

குல தெய்வம், அனுகூல தெய்வம் இஷ்ட தெய்வம் ஆராதனை தெய்வம் என்று தனித்தனியாக அறிந்து கொண்டு வழிபாடு செய்தால் நாம் எடுத்தது செய்யும் எந்த முயற்சியும் முழுமையாக பயன் தரும். இதனால் தான் சிலருக்கு செய்யும் பரிகாரங்கள் முழுமையாக பலன் தருவதில்லை. தெய்வ குத்தம் என்று கிராமங்களில் சொல்வதை நாமும் பார்த்திருப்போம் அல்லது கேட்டிருப்போம்.

ஒரு குடும்பத்தில் பிறந்த இருவருக்கும் ஒரே மாதிரி தெய்வங்கள் அமைவதில்லை. இது தான் பூர்வ புண்ணியம். இந்த குல தெய்வங்களை நாம் ஜோதிட ரீதியாக ஆய்வு செய்து, வழிபடு தெய்வங்களை எடுத்து சொல்லி வழிபாடு செய்த பின் உரிய பரிகாரங்களை செய்தால் முழுமையாக பலன் கிடைக்கும்.

இதனை ராசி கட்டத்தில் 5ம் இடத்தை கொண்டு குல தெய்வத்தையும் 9ம் வீட்டை கொண்டு அனுகூல தெய்வத்தையும் அம்சத்தில் 5ம் வீட்டை கொண்டு ஆராதனை செய்ய வேண்டிய தெய்வத்தையும் 9ம் வீட்டை கொண்டு இஷ்ட தெய்வத்தையும் சொல்ல வேண்டும். நவாம்சத்தில் லக்னாதிபதி அமர்திருக்கும் இடத்தின் 8ம் வீட்டை கொண்டு, கும்பிட மறந்த தெய்வம் அல்லது தடைகளை ஏற்படுத்தும் தெய்வ குற்றங்களை சொல்லலாம். ஒவ்வொரு கிரகங்களும் சில தெய்வங்களை குறிப்பிடுவதால் அவைகளை அறிந்து உரிய வழிபாடு செய்து அதன் பின் பரிகாரம் செய்தால் முழு பலன் கிடைக்கும்.

குல தெய்வங்கள் நமக்கு வழி காட்டுபவர்கள் அதனை வழிகாட்டியின் துணையுடன் நம் செயல்கள் அமைந்தால் சிரமங்களுக்கு இடம் இல்லை. நம் முன்னோர்கள் குல தெய்வம் யார் என்ற விவரங்களை பின்னால் வரும் சந்ததியருக்கு தெரியப் படுத்தாமல் காலமானதினால் இது போன்று சூழ்நிலை ஏற்படுகிறது.

ஈஸ்வர அம்சத்தில் உள்ள தெய்வங்களை சூரியனுக்கும், தாயாரின் அம்சத்தில் உள்ள தெய்வங்களை சந்திரனுக்கும் முருகன் துர்க்கை போன்ற தெய்வங்களை செவ்வாய்க்கும், விஷ்ணு அம்சங்களை புதனுக்கும், சாந்தச்வரூபமான தெய்வங்களை வியாழனுக்கும், கன்னிமார்களை சுக்கிரனுக்கும், சாஸ்தா கருப்புசாமி போன்ற தெய்வங்களை சனிக்கும் தெய்வங்களாக குறிப்பிட்டு சொல்லுவார்கள்.

வணங்கும் தெய்வங்கள் வேறு வழிபடும் தெய்வங்கள் வேறு என்ற அடிப்படைகளை புரிந்து கொள்ள வேண்டும்.

யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாது ஓர் பாகனார் தாம் வருவர்

என்ற சித்தியார் வாக்கை எண்ணி பார்த்தல் சிறப்பே ஆகும்.

எனக்கு குல தெய்வம் எது என தெரியாது. ஜோதிடரை கேட்பதற்கும் கூச்சமாக இருக்கிறது என நினைப்பவர்கள். ஆறுமுக கடவுள் முருக பெருமானை வழிபடு தெய்வமாக கொண்டு முயற்சிகளில் இறங்கலாம் என்று பொதுவாக சொல்லுவார்கள். இதுவும் சரி தானே. இதை ஒட்டியே "சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை; சுப்பிரமணிய னுக்கு மிஞ்சிய தெய்வம் இல்லை" என்ற சொல்லடை நம்மிடையே இருப்பதுண்டு.

சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே.

என்ற திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருமுறை பதிகத்தை தினமும் படித்து வர நம் உள்ளுணர்வு நம் குல தெய்வத்தை காட்டி கொடுக்கும். அதனை அறிந்து முறையாக குல தெய்வ வழிபாடு செய்து அதன் பின் உரிய பரிகாரங்களை முறையாக செய்தால் முழுமையான பலன்கள் பெறலாம். வரும் தலைமுறைகளுக்கு இந்த வழிபாட்டு முறைகளை சொல்லி தாருங்கள். அனைவரும் வாழ்வில் எல்லா நலனும் பெற திருமுன் பிரார்த்தனை செய்கிறோம்.

9

பிரச்சனையை தரும் பிரேத தோஷம்

மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயம் உண்டு. “மாண்டார் வருவரோ மாநிலத்தில்” என்பது ஒவ்வை வாக்கு. “இவருக்கு கிடைத்து விட்டதே..” என பொறாமை படாத ஒரே விஷயம் மரணம் மட்டும் தான் என்று ஒரு வாசகம் உண்டு.

ஆனாலும் பாருங்கள்; ஒருவரின் மரண செய்தி வந்தவுடன் எத்தனை பகை இருந்தாலும் அதனை சில மணி நேரம் ஒதுக்கி வைத்து விட்டு மரண துக்கத்தில் கலந்து கொள்வார்கள். மரணத்தை தொடர்ந்து தான் பிதுர்க்கடனும் அவரவர் குடும்ப உறுப்பினர்கள் செய்வார்கள்.

மரண சடங்கில் ஒரு துரும்பும் பிசகாது செய்வது மிக மிக அவசியமும் கவனமும் இருக்க வேண்டும். இறந்தவர் எவ்வளவு பெரிய பதவி வகித்தாலும் அவர் பெயரை நீக்கி, அதற்கு பிணம் என்று பெயர் வைப்பார். நீரில் குளித்து முடித்தவுடன் அவரை மறந்து விடுவார் என்று பட்டினத்தார் பாடல் இப்படி சொல்லும்.

‘பெயரினை நீக்கி பிணம் என்று பெயரிட்டு
சூரையங் காட்டிடை கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிவாரே!’

இறந்த அந்த உடலுக்கு, முறையாக செய்ய வேண்டிய சடங்குகளை செய்து அந்த பூத உடலை அலங்காரம் செய்து அதனை வழி அனுப்புவதும் தொடர்ந்து நடப்பு காரியங்களை செய்வதும் ஆண்டு தோறும் பிதுர் கடன் செய்வதும் நம் பிறப்பின் கடன்.

வைதீக தர்மத்தில் உள்ளவர்கள் அபரி கிரியை என்றும் சைவ மரபில் தீட்சை பெற்றவராக இருந்தால் அந்தியேஷ்டியும் செய்த பிறகு தான் மற்ற செயல்களை மேற் கொள்வார்கள்.

இதில் இந்த பிரேத தோஷ சாபம் ஏற்பட்டுவிட்டால் அவர்களின் ஜீன்களில் ஏழு வம்சத்திற்கு இது தொடரும். அதனால் தான் பிரேத தோஷம் பெரும் பிரச்சனையை தரக் கூடியது.

அந்திம கிரியை செய்ய வருபவர் வெளி நாட்டில் இருப்பதாலும் (குளிர் சாதன பெட்டியில் வைத்து) அல்லது வேறு பல காரணத்தாலும், இறந்த உடலை உடனே தகனம் செய்யாமல் நீண்ட நாட்கள் வைத்திருந்தாலும், துக்கம் விசாரிக்க மரண சம்பவித்த இடத்திற்கு சென்று வந்த உடன் குளிக்காமல் மற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டாலும் இந்த பிரேத தோஷம் வரும்.

பங்காளி சண்டை, பிணத்தை வைத்துக் கொண்டு சொத்து தகராறு, பிணத்தை தாண்டுதல், பிரேதத்தை அலங்காரம் செய்யாமல் தகனம் செய்தல், இறந்தவரை ('போய் சேர்ந்தான்யா' என்பது போல) திட்டுதல், அல்லது பேசுதல், சடங்குகள் செய்ய தவறிய தனிஷ்டையில் நிகழ்ந்த மரணம், அந்தியேஷ்டி செய்யாமல் உடலை தகனம் செய்தல், துக்கம் அல்லது மவுனம் அனுஷ்டிக்காமல் இருப்பது எரிக்க வேண்டியவர்கள் புதைப்பதாலும், (எரிப்பவர்கள்–ராகு, புதைப்பவர்கள்–செவ்வாய்).பல இடங்களில் இன்றைய நடைமுறையில் உள்ள கருணை கொலை இப்படி பல காரணங்களை சொல்ல முடியும்.

இது எந்த வகையான பாதிப்பை ஏற்படுத்தும் தெரியுமா.. ? கொலை தற்கொலை போல செயற்கை மரணம் வயதான பெற்றோர்களை சரியாக கவனிக்காமல் இருப்பது, கசப்பான திருமண வாழ்வு, முறைகேடான உறவுகள், திறமை இருந்தும் வாய்ப்புகள் கை நழுவி செல்லுதல் இப்படி பல.. பல...

எப்போ இந்த தோஷ பாதிப்பு வரும் என தெரிந்து கொள்வது தான் இந்த பரிகாரம் சொல்ல வரும் செய்தி. பூர்வ புண்ணியஸ்தானமும் கர்மஸ்தானமும் பாதிக்கப்பட்டு இருந்தால்

அல்லது அதன் அதிபதிகள் பாதிக்கப்பட்டு இருந்தால் அந்த அதிபர்களின் தசை புத்திகள் நடக்க இருந்தால் இந்த பாதிப்பு வரும். அவர்கள் அநேகமாக பித்ருதோஷத்தில் பாதிக்கப்பட்டு இருப்பார்கள்.

ஒரு ஜாதகத்தில் பிரேத சாபத்தினை மாந்தியை கொண்டு தெரிந்துகொள்ளலாம். ஒரு ஜாதகத்தில் மாந்தி உடன் 4ல் பாதகாதிபதி சேர்ந்தோ 4ஆம் அதிபதி வேறு எந்த பாவத்திலாவது மாந்தியுடன், பாதகாதிபதியுடன் சேர்ந்தாலோ பிரேத சாபம் உள்ளது என அறியலாம். அது எந்த வகை சாபம் என்பதை அது எந்த கிரகத்துடன் இணைவு பெற்று உள்ளது என்பதை வைத்து சொல்லலாம். இதனால் தான் துக்கம் விசாரிக்க செவ்வாய், வியாழன் என நாட்களை தேர்வு செய்வார்கள்.

இதற்க்கு பரிகாரமாக மஹாமிருதியுஞ்ச ஹோமம் செய்ய வேண்டும். இதற்க்கு நிறையா பொருள் செலவாகும் அதனால் இந்த ஹோமம் எங்காவது செய்யும்போது நீங்களும் இந்த தோஷம் இல்லை என்றாலும் அவசியம் கலந்து கொள்ளுங்கள்.

எப்போதாவது தான் இப்படி நடக்கும். அதுவரை காத்திருக்க வேண்டுமா ? என நினைப்பவர்கள் விஜயம்பதி என்ற தலத்தில் உள்ள மஹாலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நவாபிஷேகம் செய்ய வேண்டும்.

இதுவும் இயலாதவர்கள், அனாதை பிணங்கள் அடக்கம் செய்ய உதவலாம். இதுவும் இயலாதவர்கள் செவ்வாய் கிழமை இறந்த பிணம் ஒன்றை தெரியாதவராக இருந்தாலும், வணங்க வேண்டும். இதற்காக பிணத்தை தேடியா போக முடியும் என கேட்காதீர்கள் உங்கள் கண்ணில் அல்லது காதில் பட்டால் செய்தால் போதும்.

எனக்கு இந்த தோஷ சாபம் இல்லை. இருந்தாலும் வழியில் எங்காவது பார்த்தால் ஒரு நிமிடம் வண்டியில் இருந்து இறங்கி வணங்கி செல்வேன். இந்த தோஷ பரிகாரங்கள் செய்தவுடன் தோஷ நிவர்த்தி ஆனதா என்று ஒருமுறை பார்த்து உறுதி செய்து

கொள்ளுங்கள். குறிப்பாக இந்த தோஷம் மட்டும் சிலருக்கு பலமுறை செய்த பின்னரும் நிவர்த்தியாகாது. நிவர்த்தி ஆகும் வரை தொடர்ந்து செய்ய வேண்டும். அதற்காக ஜோதிடரை கோவித்துக் கொள்ளக் கூடாது. நம் வினைப்பயன் என்று அமைதி கொள்ள வேண்டும். நல்லதே நடக்கட்டும்.



10

சொந்த வீடு வேண்டுமா?

வீடு வாங்கனுமா ? வேண்டாமா ? என கேட்டு பாருங்கள்.. பலரிடமிருந்து வரும் பதில் நமக்குன்னு ஒரு வீடு வேண்டாமா ? என்று தான் இருக்கும். இது சரியா தவறா என்ற கோணத்தில் நாம் பார்க்க வேண்டாம். சிலருக்கு வீடு வாங்கி அதற்க்கு கட்டும் 'இஎம்ஐ' வட்டி இவைகளை கணக்கு போட்டு பார்த்தால் இதில் கிடைக்கும் பயன் திருப்தியாக இருக்காது என்பார்கள்.

இன்றைய நாளில், சொந்த வீடு இருந்தால் தான் பெண் கொடுப்பார்கள் என்ற நிலைக்கு நமது இளைய சமுதாயம் தள்ளப்பட்டு விட்டார்கள். அதனால் வீடு என்பது கனவோ நனவோ.. இப்போ மொபைல் போல கட்டாயமாகி விட்டது. இன்றைய நாளில் வீட்டு கடன் சுலப தவணையில் கிடைக்கிறது என்றாலும் கொஞ்சம் கூட காம்ப்ரமைஸ் இல்லாமல் ஒரு வீடு கிடைத்து விடுகிறதா என்றால் அது பில்லியன் டாலர் கேள்வி தான்.

சிலருக்கு யோகம் இருக்கும் வசதி இருக்காது. சிலருக்கு வசதி இருக்கும் யோகம் இருக்காது. சிலருக்கு வீடு இருக்கும் ஆனால் அதில் ஏதாவது பிரச்சனை இருக்கும். அது வாஸ்து பிரச்சனை வேறு வந்து நிற்க்கும்.

சரி தான். எங்க வீட்டில் கூட என யாராவது தங்கள் பிரச்சனையை பகிர நினைக்கிறீர்களா. ? இந்த கட்டுரையை முழுதும் படியுங்கள். விடை உங்களுக்கு கிடைக்கும்.

ஜோதிட ரீதியாக சொந்த வீடா? தனி வீடா? பிளாட்டா? தோட்ட வீடா? மூதாதையர் வீடா? என்று சொல்ல முடியும். சகலை மாமனார் சொத்தை எடுத்து கிட்டார் அது திரும்ப கிடைக்குமா என்பதற்கும் பதில் சொல்லலாம். ஒவ்வொன்றுக்கும் ஒருவித வழிபாட்டு முறை உண்டு.

வீடு சொந்தமாக அமைய குறிப்பாக சொல்ல வேண்டுமானால், ஜாதகத்தில் செவ்வாய் வர்கோத்தமம் பெற்று இருக்க வேண்டும். லக்னாதிபதி 4ம் அதிபதியுடன் பரிவர்த்தனை பெற்று இருந்தால் கூட போதும் வீடு அமையும். “நாற்கோணம் பூமி” என்று தான் உண்மை விளக்கம் என்ற சாத்திர நூல் சொல்லும்.

தனி வீடாக இருந்தாலும், அடுக்கு மாடி வீடாக இருந்தாலும் சில அடிப்படையில் உள்ள வீட்டின் அமைப்பு சரியாக அமையா விடினும் வீட்டில் மன நிம்மதியோ அல்லது வளமான வாழ்க்கையோ அமையால் போய்விடலாம். சிலருக்கு எப்போதும் மருத்துவ செலவுகள் இருக்கும். சில இடங்களில் துர்ஆவிகள் நம்மை அறியாமல் ஏதோ ஒரு வித பயத்தை தந்து கொண்டே இருக்கும். காற்று சத்தம் கேட்டல் கூட யாரோ வருவது போல தோன்றும்.

சிலர் கோயில்களில் கல்லை அடுக்கி வீடு கட்ட வேண்டும் என வேண்டுவார்கள். பணமிருந்தும் மனதிற்கு ஏற்ற வீடு கிடைக்க வில்லை என ஏங்குபவர்களும் சரி. இடத்தை மீத படுத்த வேண்டும் என பில்டர்களும் இடத்தை தருகிறார்கள் ஆனால் வசிக்கும் இடம் தோஷ சுத்தமாக இருக்கிறதா என காட்டுவதில்லை. பிரமஸ்தானத்தில் கூட அடுப்பறையை வைத்து விடுகிறார்கள். என்ன செய்வது இது அவர்களுக்கு வியாபாரம், நமக்கு வாழ்க்கை.


இது போன்ற வீட்டில் வாஸ்த்து பிரச்சனை போன்ற எந்த பிரச்சனை இருந்தாலும், புதிய வீடு கட்ட அல்லது வாங்க வேண்டும் என விரும்புவர்களும் ஓதிமலை ஆண்டவரை சென்று வணங்கி வாருங்கள். இந்த மலை அடிவாரத்தில் செங்கல் வைத்து இருப்பார்கள். உங்களால் எத்தனை செங்கலை எடுத்து செல்ல முடியுமோ அதனை மலைமேல் சென்று செலுத்தி விடுங்கள். அடுத்த ஓராண்டிற்குள் வீடு கட்டுவதற்காக வாய்ப்புகள் கூடி வரும்.

இந்த யோகம் எல்லோருடைய வாழ்விலும் வரும். சிலருக்கு அசையா சொத்தாக, சிலருக்கு அசையும் சொத்தாக இன்னும் சிலருக்கு போக பொருளாக வரும். அதனை புரிந்து கொண்டு சாதகமாக்கிக் கொள்வது தான் வாழ்வின் வெற்றி.

புதிய கண்டு பிடிப்புகளில் உள்ளவர்களும் புதிய முயற்சி செய்பவர்களும் ஒதிமலை ஆண்டவரை அங்கு தரும் ராஜகனி என சொல்லும் எலுமிச்சை பழத்தை பெற்று பூஜித்து வர உங்களுக்கு சாதமான சூழல் அமையும்.

பல அதிசயங்களை கொண்ட இந்த திருக்கோயில் மலை ஏறுவதற்கு சற்று சிரமமானது. வேறு மாற்று வசதிகளும் கிடையாது. ஞாயிற்று கிழமை மற்றும் கிருத்திகை போன்ற நாட்களில் மட்டும் தான் திறந்து இருக்கும். மாலை 6 மணிக்கு மேல் செல்வதற்கும் அனுமதி இல்லை. அதனால் உங்கள் பயணத்தை திட்டமிட்டுக் கொள்ளுங்கள். இங்கு செல்ல வாய்ப்பில்லை என்ன செய்ய என்பவர்கள் வீட்டு வரைபடத்தை வரைந்து ஒரு செங்கலை அதன் மீது வைத்து


வீட்டிலேயே சுந்தரர் அருளிய



பத்தூர் புக்கு இரந்துண்டு பல பதிகம் பாடிப்
பாவையரைக் கிறி பேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார் தம் எலும்பணிந்து சேவேறித் திரிவிர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொரு நாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கி மிளிர் மணி வயிரக் கோவை
அவை பூணத் தந்தருளீர் மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ் சாந்து பணித்தருள வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

என்ற திருப்பதிகத்தை ஒரு முறை தினமும் காலையும் மாலையும் முறைப்படி படனம் செய்து வரலாம்.

மனதிலே கோயில் கட்டிய பூசலாரின் பக்திக்கு மனம் இறங்கவில்லையா அந்த ஈசன். இந்த முயற்சியில் வீட்டை மனதில் வழுத்தி இறைவனை வேண்டி வருந்தினால் நிச்சயம் பலன் உண்டு. நல்லதே நடக்கும்.



11

தடைகளுக்கான விடை

எந்த ஒரு செயலுக்கும் முயற்சியும் சில பயிற்சியும் அவசியம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனாலும் நம் முயற்சிகள் எல்லா சமயங்களிலும் வெற்றியை தருகிறதா என்றால் பலருக்கும் பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

நம்மை சமாதனபடுத்த இதற்க்கு எத்தனை காரணங்களை நாம் சொன்னாலும் முயற்சிகள் வெற்றிக்கனியை தராத போது நமக்கு ஏற்படும் வருத்தத்தை யார் சமாதனம் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள மனம் வராது.

குறை பிரசவத்தில் பிள்ளையை பெற்றுக் கொண்ட தாயாகட்டும், பங்கு சந்தையில் பணம் போட்டு முதல் இழந்தவராகட்டும், இன்டர்வியூ வில் தோற்று போன வேலை தேடும் இளைஞர் ஆகட்டும், இப்படி யாராக இருந்தாலும் இந்த தடைகளை தவிர்க்க முடியுமா என்று ஏங்கி தவிப்பவர்களுக்காக தான் இந்த பகுதியின் பரிகார ஆலோசனை.



தன்வலிமை, செயலின் வலிமை, பகைவரின் வலிமை துணையாக நிற்பவரின் வலிமை என எல்லாவற்றையும் ஆராய்ந்து செயலில் இறங்க வேண்டும் என்று வள்ளுவம் சொல்கிறது. இதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து செய்வதற்கு பொறுமையோ, அவசரமான இந்த உலகத்தில் நேரமோ, அதற்கான போதிய அறிவோ நமக்கு இல்லை.

இதை தவிர்க்கத்தான் விநாயகரை வழிபட்டு செயலை தொடங்க வேண்டும் என்று சொல்லுவார்கள். ஆனாலும் இதையெல்லாம் நாகரீகம் என்ற போலியான வளர்ச்சியில் விரும்பியோ விரும்பாமலோ தள்ளி வைத்து விட்டோம். ஆனாலும் பிரச்சனை என்று வரும் போது ஏதாவது தீர்வு கிடைக்காதா என ஏங்குவதும் தவிர்க்க முடியாதது தான்.

ஜோதிட ரீதியாக சனி கேது தொடர்பு இருக்கும் போது தொழில் தடை ஏற்படும். சனி இருக்கும் இடத்தில் இருந்து 1, 2, 5, 9 ஆகிய இடங்களில் கேது இருந்தாலும், கோச்சாரத்தில் இருந்தாலும் சுழற்சி முறையில் இருந்தாலும் தொழிலில் தொய்வும் தடையும் ஏற்படும்.

10ம் இடம் பலமாக இருந்தால் தொழில் விருத்தி உண்டு. அதனால் தான் 10இல் ஒரு கிரகமாவது இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். 4 இல் கிரகம் இருந்தாலும் பரவாயில்லை அது 10மிடத்தை பார்க்கும் அதனாலும் தொழில் பலம் உண்டு.

சரி இந்த தடைகள் நீங்க அல்லது தொழில் தடை ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என நினைப்பவர்கள்

ஆண்டுக்கு ஒரு முறையாவது ஆலய தரிசனம் செய்ய வேண்டும். தடைகளை களைந்து விடைகளை தரும் திருநெடுங்கள நாதரை தரிசித்து பூமாலை சார்த்தி வழிபாடு செய்ய வேண்டும்.

என்னுடைய தொழிலை நான் தான் பார்க்க வேண்டும் இதை விட்டுட்டு போக முடியலை சாமி என சொல்பவர்கள் தினமும் காலை மாலை இரு நேரமும் ஒரு சொம்பில் கங்கை நீரை வைத்து வணங்கி

மறை உடையாய்! தோல் உடையாய்! வார்சடை மேல் வளரும்

பிறை உடையாய்! பிஞ்ஞகனே!" என்று உனைப் பேசின் அல்லால்,

குறை உடையார் குற்றம் ஓராய்! கொள்கையினால் உயர்ந்த

நிறை உடையார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே

என்ற இடர் களையும் பதிகம் தினமும் படனம் செய்ய வேண்டும்.

இத்துடன் தொழில் நடத்தும் இடங்களில் தன ஆகர்ஷண எந்திரம் செப்பு அல்லது வெள்ளி தகட்டில் வரைந்து திருவிளக்கு ஏற்றி பூஜித்து வர வேண்டும். இதற்க்கு வாய்ப்பு இல்லாதவர்கள் பண பெட்டியில் சஸ்த்திர பந்தம் வைத்து தொழில் நடத்தி வர தொழில் தடை இல்லாமல் நடை பெறும். இது வேல் வடிவில் இருக்கும் பாதுகாப்பு பந்தம் இதனை பையில் வைத்திருந்தாலே போதும். மாற்று மதத்தினர் கூட இதனை பயன் படுத்தி பலன் பெற்று உள்ளனர்.

ஜாதகத்தில் விதிக்கப்பட்ட தொழில் என்ன ? நாம் செய்யும் தொழில் என்ன ? என்பதை அறிந்து அதற்க்கு ஏற்ப தொழிலை தேர்வு செய்ய வேண்டும். அது கூட்டு தொழிலாகவோ அல்லது குடும்ப தொழிலாகவோ இருக்கலாம். அத்துடன் தடை வரும் காலத்திற்கு மனம் ஒன்றி உரிய பரிகாரம் செய்தால் தடைகளுக்கு எல்லாம் விடை கிடைக்கும்.

பரிகாரம் செய்தால் பலன் கிடைக்குமா என்ற ஐயம் வேண்டாம். பலன் தரும் பரிகாரங்கள் மட்டும் தான் மக்கள் பயன் பெற இந்த நூலில் பகிர்ந்து கொள்கிறோம். நோய் வந்தால் மருந்து சாப்பிடுவது போல கிரக சூழலில் வரும் மாற்றங்கள் வரும் போது தடைகளை நீக்கி விடை காண பரிகாரம் அவசியம் என்பதை சிந்தித்து பார்த்தால் நீங்களே உணர்வீர்கள்.

உங்கள் ஜாதகத்தை கொண்டு உங்களுக்கான தொழில், தொழிலில் வரும் தடை, தடைக்கான விடை என நம்பிக்கைகுரிய ஜோதிடரை அணுகி பயன் பெறுங்கள். சொல்லப்படும் பரிகாரங்களை நம்பிக்கையோடு மனம் ஒன்றி செய்தால் பலன் நிச்சயம் உண்டு.

நல்லது சொல்லி உள்ளது நல்லதே நடக்கும்.

12

பிரச்சனையை தரும் பிரம்மஹத்தி

பெரியவர்களை அவமதித்ததால் ஆசிர்வாதமா கிடைக்கும்? யாரையும் அவமதிக்க கூடாது என்று தானே தமிழ் சொல்லித் தரும் பாடம். "ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்" என்பது தானே ஔவை வாக்கு.

இதை பல சமயங்களில் புரிந்து கொள்ளாமல் நம்முடைய உணர்வு கொப்பளிக்க எதையாவது சொல்லி விடுவதும் பின் அதை மறந்து விடுவதும் வாடிக்கை தான். ஆனாலும் பாதிக்கப்பட்டவர்கள் அதனை அடுத்த ஜென்மம் வரை மறக்க மாட்டார்கள்.

இப்படி ஜென்ம ஜென்மாக தொடர்வது தான் பிரமஹத்தி தோஷம். இந்த பிரமஹத்தி ஒருவரின் ஜாதகத்தில் அமைந்து விட்டால் அவர்களால் முழுமையாக எதுவும் செய்ய முடியாது. ஆண்டுக்கணக்கில் குழப்பம் நிலவும். ஏன் இது இப்படி நடக்கிறது என்று அவர்களே யோசித்து குழம்பி விடுவார்கள். இதற்க்கு காரணம் என்ன.

செல்லிடத்து காப்பான் சினம்காப்பான் அல்லிடத்து
காக்கின் என் காவாக்கால்

என வள்ளுவ பெருந்தகை நமக்கு சொல்லி தந்த போதும் அதை நாம் அலட்சியம் செய்து விடுகிறோம். நூல் படித்த ஆசானை அவமதிப்பு செய்தல், நூல் ஆசிரியரை விமர்சனம் செய்தல் கரு சிதைவு செய்தல், குடும்பத்தில் இணக்கமான உறவு முறை ஏற்படாதபடி நடந்து கொள்ளுதல் உட்பட அறிஞர்கள் மனம் புன்படும்படி செய்யும் அனைத்து செயல்களாலும் இந்த பிரம்மஹத்தி வரும்.

'நான் எல்லாருக்கும் நல்லது தான் பண்றேன் ஆனால் எனக்கு கெட்ட பெயர் தான் மிச்சம்' என்று சொல்பவர்களுக்கும் திடீர் தொழில் சரிவு ஏற்படுவதற்கும், குடும்ப ஆரோக்கிய வளர்ச்சி இல்லாமைக்கும் இந்த பிரமஹத்தி தான், நம் ஜாதகத்தில் இருந்து தன் வேலையை செய்து கொண்டிருக்கும்.

நவ கிரகங்களில் பெரிய கோள் எது ? குருவும் சனியும் தான். இந்த இருவர்களும் சந்திந்த்தால்..., ஒருவரின் ஜாதகத்தில் இந்த குருவும் சனியும் பார்வையாலோ சேர்க்கையாலோ அல்லது ஏதாவது ஒரு வகையில் சம்பந்தப்பட்டு இருந்தால் இந்த பிரமஹத்தி வந்து ஒட்டிக் கொள்ளும்.

திருவிடைமருதூர் தலத்தில் பிரம்மஹத்தி வாசலில் நிற்கும். ஒரு வாசல் வழியாக சென்று மறு வாசல் வழி வர வேண்டும் என்று சொல்லுவார்கள். இந்த பரிகாரம் முழுமையடைய இன்னும் சில வழிமுறைகளை சிரத்தையுடன் செய்யவேண்டும்.

ஜாதக ஆய்வு செய்து பிரம்மஹத்தி இருப்பதாக ஜோதிடர் சொல்லி விட்டால் நிச்சயமாக பரிகாரம் செய்ய வேண்டும். கொஞ்சம் சிரமமான பரிகாரம் தான், நிறைய காலம் பிடிக்கும். ஆனாலும் இதனை முறைப்படி முழுமையாக செய்தால் மட்டுமே நிவர்த்தி ஏற்படும். சில குறிப்புகளை சொல்கிறேன் கவனமாக குறித்து கொள்ளுங்கள்.

சித்திர பவுர்ணமி அன்று முறைப்படி விரதம் இருந்து பூஜைகள் செய்து அதன் பின் வசதியான ஒரு நாளில் திருவையாறு அருகில் உள்ள திருக்கண்டியூர் திருத்தலத்தலத்தில் அருள் பாலிக்கும் மங்கள நாயகி உடனுறை பிரம்ம சிகண்டீச்வரரரை வணங்கி, முறையாக வழிபாடு செய்ய வேண்டும். இந்த திருத்தலத்தில் மூலவர் சந்நிதியில் இரு புறமும் விநாயகரும் முருகனும் இருப்பதற்கு பதில், இரு புறமும் முருகனே இருந்து அருள் பாலிக்கும் அற்புதமான திருத்தலம் இது. இன்னும் சிறப்பாக கூறின் இங்கு முருகன் கையில் ஜபமாலையுடன் ஞான ஆசிரியராய் வழிபாடு செய்பவரின் தோஷ நிவர்தி செய்வதற்காகவே காத்திருப்பார்.

இத்துடன் முடியவில்லை. இதை தொடர்ந்து வரும் மாசி மாத தீர்த்த யாத்திரை செய்து அதன் பிறகு தான் திருவிடைமருதூர் மகாலிங்கத்தை தரிசனம் செய்து தோஷ நிவர்த்தி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நிறைவாக 12 ஆண்டுக்கு ஒரு முறை வரும் மகாமகத்தில் தீர்த்தமாடல் வேண்டும்.

'அப்பா இவ்வளவு பெரிய விஷயமா?' என்று யோசித்து மலைக்க வேண்டாம். அவ்வப்போது வாய்ப்பு கிடைக்கும் போது இயன்றதை செய்யுங்கள். அதனால் தான் மாசிமாதத்திலும் மகாமகத்திலும் இந்த தோஷம் இல்லாதவர்கள் கூட தீர்த்த யாத்திரையும் புண்ணிய தீர்த்தத்தில் நீராடுதலும் செய்வார்கள்.

இந்த வருடம் மே / 2017 மாதம் 10 ந்தேதி சித்ரா புவர்ணமி வருகிறது. அதை கருத்தில் கொண்டு இந்த தோஷம் இருப்பவர்கள் தோஷ நிவர்த்திக்காக சங்கல்பம் செய்து முயற்சிகள் மேற் கொள்ளலாம்.

இத்தனை நாள் இப்படியே இருந்து விட்டேனே.. இனி ஏதாவது செய்ய வேண்டும் என நினைக்கிறேன் என்ன செய்வது என ஏங்குபவர்கள், வசதி இருப்பவர்களாக இருந்தால் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில் உங்கள் பங்களிப்பை கொடுங்கள். அதுவரை காத்திருக்க வேண்டுமா என நினைப்பவர்கள் ஜோதிடம் படித்த நூலாசானுக்கு உங்களால் முடிந்ததை தந்து நல்லாசி பெறுங்கள். அவ்வளவு வசதி இல்லையே என்பவர்கள் அப்பர் சுவாமிகள் பாடிய



எய்தானை, புரம் மூன்றும் இமைக்கும் போதில்;
இரு விசும்பில் வருபுனலைட் திரு ஆர் சென்னிப்
பெய்தானை; பிறப்பு இலியை; அறத்தில் நில்லாப்
'பிரமன்' தன் சிரம் ஒன்றைக் கரம் ஒன்றினால்
கொய்தானை; கூத்து ஆட வல்லான் தன்னை;
குறி இலாக் கொடியேனை அடியேன் ஆகச்
செய்தானை; திரு நாகேச்சுரத்து உளானை;
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே.

என்ற திருத்தாண்டகத்தை தினமும் படனம் செய்யுங்கள். இன்றைய வாழ்க்கை சூழலுக்கு ஏற்ப படிக்க நேரம் அல்லது வாய்ப்பு இல்லாதவர்கள் ஆடியோவில் கேளுங்கள்.

இறை வழிபாடு உங்கள் வாழ்க்கையை சீர்படுத்தும். விதியை மதியால் வெல்ல முடியாது. ஆனால் இறைவன் திருவருளால் வெல்ல முடியும்.அன்று முதல் இன்று வரை இதற்க்கு பல சான்றுகள் இருக்கிறது.

நம்பிக்கையோடு இருங்கள். உங்கள் வாழ்க்கையின் வெற்றி இறைவன் திருவருளால் மாற்றி அமைக்கப்படும். சொல்லப்படும் பரிகாரங்களை நம்பிக்கையோடு செய்து பலன் பெறுங்கள் பயன் பெறுங்கள். நல்லதே நடக்கும்.

13

விரும்பிய பாடத்தில் வெற்றி பெற.

பரீட்சை முடிந்தது என நிம்மதியாக இருக்க முடியவில்லை. கோடைகால கல்வி ஒரு பக்கம். அடுத்து விரும்பிய மேல் படிப்பு கிடைக்கவேண்டும் என்பது இன்னொரு பக்கம்.. அதை விட முக்கியம் நாம் கேட்கும் அந்த கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும். இப்படி பல சூழலை சந்திக்க வேண்டியிருக்கும்.

முன்பெல்லாம் படிப்பு பட்டம் அதற்க்கு தான் முக்கியத்துவம் இன்றைய நாளில் படிக்கும் கல்லூரிக்கும் முக்கியத்துவம் உண்டு. காரணம் கேம்பஸ் இன்டர்வியூவில் சிலருக்கு நல்ல வேலை கிடைத்து விடுகிறது. வேலை தேட வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடுகிறது.

அதெல்லாம் சரி. நாம வாங்கற மதிபெண்ணுக்கு இந்த துறை படிப்பு கிடைக்குமா ? இந்த கல்லூரியில் கிடைக்குமா ? அது கிடைக்க என்ன செய்ய வேண்டும்.அதை சொல்ல வருவது தான் இந்த பரிகார குறிப்பு.



'படிப்பா ?', 'அறிவா ?' என்ற இந்த போட்டியில் ஒன்றை ஒன்று வெற்றி பெற போட்டி போடுகிறது. நமக்கு சாதகமான சூழலை நாம் தான் அமைத்துக் கொள்ள வேண்டும்.

கல்விக்கு காரகத்துவம் தருபவர் புதன். இந்த கிரகம் எந்த வகையில் பலம் பெற்று இருக்கிறது யாருடன் இணைவு பெற்று இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு நாம் படிக்கும் முயற்சியை முடிவு செய்ய வேண்டும். பட்ட படிப்புக்கு 4ம் இடத்தையும், 9ம் இடத்தை மேற் படிப்புக்கும் வைத்து அறிந்து கொள்ளலாம். இத்துடன் 2,மற்றும் 5மிட பலம் அறிவதும் முக்கியம்.

படிக்க விரும்பும் பலருக்கும் பொதுவாக புத ஆதித்ய யோகம் இருக்கும். சந்திரனுக்கு கேந்திரத்தில் புதன் – குரு இருந்தால் நாம் விரும்புகிற உயர்கல்வியை பெற்று அதில் சாதிக்க முடியும்.

ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற அரசு சம்பந்தமான உயர் அதிகார பதவியில் அமர்வதற்கு சூரியன், சந்திரன், செவ்வாய் போன்ற கிரகங்களின் பலம் அவசியம்.

கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஆவதற்கு லக்னாதிபதி பலம் இருப்பது சாதகமாகும். லக்னம் 4,9,10 ஆகிய இடங்களில் ராகு இருப்பது நலம் தரும்.

கணக்கு சம்பந்தமான படிப்புகள், ஆடிட்டிங் படிப்பு அக்கவுன்டன்சி போன்றவற்றில் தேர்ச்சி பெற லக்னாதிபதி மற்றும் சந்திரன் பலம் பெறவேண்டும்.

சட்ட படிப்புக்கு லக்னம், லக்னாதிபதி, 2–ம் இடம், 2–ம் அதிபதி, இவை பலம் பெற்று இருக்க வேண்டும்.

மருத்துவ படிப்புக்கு கேது லக்னத்துக்கு 4,9,10 ஆகிய இடங்களில் அமைவது நல்லது.

இன்ஜினியரிங் படிப்புக்கு ஜாதகத்தில் சனி, புதன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தோ, இணைவு அல்லது பார்வை பெற்றோ இருப்பது நல்லது.

சமையல் கலை, கேட்டரிங் தொடர்பான படிப்பதற்கு சூரியன், சந்திரன், செவ்வாய் சாதகமாக இருப்பது அவசியம்.

இன்றைய நாளில் படிப்புகள் பல விதமாக இருப்பதால் ஆழ்ந்து சிந்தித்து இன்றைய நடைமுறைக்கு ஏற்ப தேர்வு செய்து மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சியை கைகொண்டால் படிப்பின்

மீது மாணவர்களுக்கும் ஆர்வம் ஏற்படும். பெற்றோர்களுக்கும் அது சுமையாக இருக்காது.

பெற்றோர்களும் அவர்கள் விரும்பும் படிப்பை பிள்ளைகளின் விருப்பம் இன்றி படிக்க சொல்வதும் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தாது. இதனை அறிந்து கொண்டு, பெற்றோர், ஆசிரியர், மாணவர், உளவியல் மருத்துவர் மற்றும் ஜோதிடர்களின் ஆலோசனையையும் பெறுதல் இன்றைய நாளில் அவசியமாகிறது.

மாணவர்கள் விரும்பிய கல்லூரியில் விரும்பிய பாடம் எடுத்து படிக்க பொன்அமராவதி சாலையில் உள்ள பிரான்மலையில் இருந்து அருள் பாலிக்கும் கொடுங்குன்ற நாதரை வெள்ளை வஸ்திரம் சார்த்தி வழிபாடு செய்யுங்கள். இந்த திருக்கோயில் மலை மீது உள்ளது. மாதோர்பாகனாய் இருக்கும் இந்த சிவனை "வேத சிவன்" என்றே அழைகின்றனர். இது பல அதிசயங்களை கொண்ட அற்புதமான திருத்தலம். வாழ்நாளில் அவசியம் ஒரு முறையாவது செல்ல வேண்டிய திருத்தலத்தில் இதுவும் ஒன்று. இத்துடன், திருஞானசம்பந்தர் அருளிய

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றம் இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர் தம் வானுலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே.

என்ற திருப்பதிகத்தை தினமும் அதிகாலையிலும் அந்தி சாயும் மாலையிலும் நேரம் ஒதுக்கி படனம் செய்ய வேண்டும். இன்றைய நாளில் கம்ப்யூட்டர் இன்டர்நெட், ஸ்மார்ட் போன் தொலைக்காட்சி என பல கவன சிதறல்கள் இருந்தாலும் இறைவழிபாட்டிற்கு என சில மணி நேரம் ஒதுக்குதல் நம்மை வளபடுத்திக் கொள்ள உதவும்.

திருமுறை படனம் மட்டுமாவது அவசியம் படிக்க வேண்டும். இன்றைய இளைய தலைமுறைகள் தமிழ் படிக்க சிரம படுவதால் இதனை **transliteration** செய்து படிக்கலாம். நடைமுறை டெக்னாலஜிக்கு தகுந்தார் போல ஆடியோவில் கேட்கலாம். ஆனால் வழிபாட்டை மட்டும் எப்போதும் விட கூடாது.

படிப்புக்கும் பரிகாரத்திற்கும் என்ன தொடர்பு என சில இளைய தலைமுறையினரும் சிந்திக்கலாம். இந்த பரிகாரம் செய்தால் நீங்கள் "ஓஹோ என மதிப்பெண் வாங்க முடியும்" என சொல்ல வில்லை. ஆனால் உங்கள் முயற்சிக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தி தரும்

அது தான் பரிகாரம். சாதகமான சூழலில் உங்கள் முயற்சி உண்மையாக இருக்கும் போது வெற்றி நிச்சயம் உங்கள் பக்கம் தானே. மூட்டு வலிக்கு வயிற்றிருக்கு ஏன் மாத்திரை சாப்பிடுகிறோம் என கேட்பதில்லை அல்லவா. பலன் தரும் பரிகாரங்கள் மூட நம்பிக்கை இல்லை. அதனால் அதனை செய்யாமல் தவிர்ப்பதும் ஆரோக்கியமானது இல்லை.

உங்கள் முயற்சி வெற்றி பெற உங்களுக்கு சாதகமான சூழல் அமைந்து விரும்பிய நிலை அடைந்திட உங்கள் நம்பிக்கைக்குரிய ஜோதிடரை சந்தித்து அவர் சொல்லும் பலன் தரும் பரிகாரங்களை செய்து பயன் பெறுங்கள். நல்வாழ்த்துக்கள்.




14

பிள்ளை வரம்

பெற்று தரும் பனை

இப்போதெல்லாம் பிள்ளைகள் திருமண காலத்தை தள்ளி வைத்து விடுகிறார்கள். வாழ்க்கையில் ஒரு நல்ல நிலையில் செட்டில் ஆகிய பிறகு தான் திருமணம் என இவர்களே தள்ளி வைத்து விடுகிறார்கள். சிலருக்கு பல் வேறு சூழலின் காரணமாக அதுவே தள்ளி போகிறது.

சரி, எப்படியோ திருமணம் ஆகிவிட்டது என்றதும், திருமணம் ஆன உடன் பிள்ளை மணி வயிறு வாய்க்க பெற வேண்டும் என பெற்றோர்கள் நினைப்பார்கள். இதிலும் சில



தம்பதிகள் இருவரும் வேலை பார்க்கும் சூழல் நேரம் இவைகளை அனுசரித்து அது தள்ளி வைக்கப்படுகிறது அல்லது தள்ளி போகிறது.

இப்படி இந்த சூழல் நடப்பதற்கு எல்லாமே ஜாதக அமைப்பு தான் காரணம் என்றாலும் உரிய பலன் கிடைக்க வேண்டும் என நினைப்பது நியாயமான ஆசை தானே. அவர்களுக்காக தான் இந்த வார பரிகாரம். இதில் மணிவயிறு வைப்பதற்கான பரிகாரம் மட்டும் பகிர்ந்து கொள்ளலாம்.

கரு தங்குவதற்கு ஆரோக்கியமான பிரசவத்திற்கு என ஒவ்வொரு நிலைக்கும் ஒரு வித பரிகார அமைப்பு உண்டு. முன்பெல்லாம் குடும்பத்தில் நிறைய உறுப்பினர்கள் இருப்பார்கள். அது நாம் இருவர். நமக்கு இருவர் என்ற நிலை மாறி “நாமே இருவர் நமக்கு போதுமே ஒருவர்” என்ற நிலைக்கு கால சூழல் நம்மை மாற்றி விட்டது. சகோதரன் சகோதரி என்ற உறவே வரும் காலங்களில் இல்லாமல் போயிடுமோ என்று சிந்திக்கும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

பொதுவாக பிள்ளை பேறு அமையாமல் தள்ளி போவதற்கு சர்ப்ப தோஷம் பித்ருதோஷம் பிராமண தோஷம் அல்லது பிரேத தோஷம் இவைகளுள் ஒன்று ஏதாவது ஒரு வகையில் தொடர்பு பெற்று இருக்கும். இதற்க்குக் முன்பெல்லாம் ராமேஸ்வரத்தில் நாக பிரதிஷ்டை செய்வார்கள். இப்போது அவை அநேகமாக செய்வதில்லை. இவைகளுக்கு தனியான பரிகாரம் செய்வதுடன் மணி வயிறு வாய்க்க குறிப்பாக சொல்லும் பரிகாரங்களை கட்டாயம் செய்ய வேண்டும். அப்போது தான் சாதகமான சூழல் அமையும். அதற்கு முன் ஜாதக ரீதியாக சில குறிப்புகளை தெரிந்து கொள்ளுவோம்.

5மிடத்தில் சர்ப்ப கிரகங்கள் இருந்தாலும் பகை கிரகத்துடன் தொடர்பு கொண்டாலும், மக்கட்பேறு அமைவதில் தடை ஏற்படும். 5க்கு உரியவன் 3இல் இருந்தாலும் 10க்கு உரியவன் 8இல் இருந்தாலும் தோஷம் தான். 5க்கு உரியவன் 12இல் இருந்தால் அடிக்கடி கரு சிதைவு ஏற்படும்.

தாம்பத்ய உறவு காலம் சேர்க்கை என பல நிலையில் இருந்து சொல்ல வேண்டும். இதில் பல நுணுக்கமான செய்திகள் உள்ளது. அதனால் தான் முன்பெல்லாம் திருமண முகூர்த்தத்திற்கு நேரம் குறிப்பார்களோ இல்லையோ, சாந்தி முகூர்த்தத்திற்கு நேரம் குறிப்பார்கள். இப்போது இது இருக்கிறதா என்பது தெரியவில்லை. இவை எல்லாம் இப்போ வெறும் சடங்காக போய்விட்டது. அன்று இரவு பயணம் செய்ய கையில் விமான டிக்கெட் உடன் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளை நான் பார்த்திருக்கிறேன்.

இந்த புத்திர பாக்கியமே ஏற்படாமல் தடை உள்ளவர்கள், பனையை தல விருட்சமாக கொண்ட தலங்களை பூஜித்து வழிபடலாம். பூர்வ புண்ணிய ஸ்தானமாக சொல்லப்படும் 5ம் இடத்தை குறிப்பது போலவே பனையை தல விருட்சமாக கொண்ட திருத்தலங்கள் ஐந்து மட்டுமே என தேவார தலங்கள் குறிப்பிடுகின்றன.

இதில் காஞ்சிபுரத்தை அடுத்த செய்யாறு அருகில் உள்ள வேதபுரீஸ்வரர் ஆலய தரிசனம் செய்ய வேண்டும். இங்கு நாக லிங்க அபிஷேகம் செய்ய வேண்டும். 11 தலை உள்ள இந்த சர்ப்பத்திற்கு சனிக்கிழமை அன்று ராகுகாலத்தில் சர்ப்ப சாந்தி செய்து இங்குள்ள சுவாமிக்கும் அம்பாளுக்கும் புதிய வஸ்திரம் வாங்கி சார்த்த வேண்டும். மகா மண்டபத்தில் இருந்து ஒருசேர தல விருட்சத்தை தரிசனம் செய்து திரும்ப வேண்டும். அப்போது தான் பலன் கிட்டும். இம்மரத்து பழத்தை சாப்பிட்டால் மணி வயிறு வைக்க பெறுவார்கள். இதனை வெளிநாட்டு தமிழ் அன்பர்களும் விரும்பி வேண்டி கேட்டு பெற்று செல்கிறார்கள்.

பல திருக்கோயில்களில் சூரிய ஒளி வருடத்தில் சில நாட்கள் மட்டும் சுவாமியின் திருமேனியில் பதியும் என்பதை நம்மில் பலரும் அறிவோம். ஆனால் இங்கு மட்டும் தான் தினமும் திருமேனியில் சூரிய ஒளி பதியும். பல அதிசயங்களை கொண்ட இத்திருத்தலம் உறுதியான பலனை தரக்கூடிய உத்தமமான திருத்தலம்.

இத்தனை தூரம் செல்ல வேண்டுமா? எங்களுக்கு லீவு கிடைப்பதே கஷ்டம். என்று தனக்குள்ளே பேசிக் கொள்பவர்கள், “வேற்குழவி வேட்கை”யை ராகம் பிசகாமல் தாலாட்டாக முறையாக பாடினால் குடும்ப வாரிசு வீட்டில் தவழும்.

பேய் அடையா பிரிவு எய்தும் ”பிள்ளையினோடு”
உள்ளம் நினைவு
ஆயினவே “வரம் பெறுவர்” ஐயுற வேண்டாம் ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர் தம்மைட் தோயாவாம் தீவினையே.

என்ற திருஞான சம்பந்தர் அருளிய திருவெண் காட்டு பதிகத்தை தினமும் பக்தியோடு படனம் செய்து வரவேண்டும். இத்துடன் வெள்ளிக்கிழமை தோறும் பாலகர்களுக்கு சுத்தமான பசும்பால் குடிக்க கொடுக்க வேண்டும்.

எந்த கிரகத்தினால் பாதிப்பு என்பதை அவரவர்கள் ஜாதகம் கொண்டு அறிந்து தினமும் சாப்பிடும் உணவு முறையில் கணவன் மனைவி இருவரும் சில மாற்றங்களை செய்து கொண்டுவிட்டால், சாதகமான சூழல் ஏற்பட்டு அவர்களுக்கு சந்தான பாக்கியம் கிடைக்கும்.

உங்கள் நம்பிக்கைக்குரிய ஜோதிடரை அணுகி ஜாதகத்தை ஆய்வு செய்து உரிய பரிகாரங்களை செய்யுங்கள். விரும்பியதை பெற்று மகிழ்ச்சியுடன் வளமுடன் வாழ இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.



15

வெளிநாடு செல்ல என்ன செய்ய வேண்டும்?

என்ன தான் வசதி வாய்ப்பு இருந்தாலும் ஒரு முறையாவது வெளிநாடு செல்ல வேண்டும் என விரும்புவது எல்லோருக்கும் உள்ள கனவு தான்.

இந்த கனவு எல்லோருக்கும் அமைகிறதா என்றால் பதில் இல்லை என்பது மட்டும் உறுதியாக உள்ளது. இதற்கு பண பிரச்சனை, குடும்ப சூழல், வாழும் முறை, பயம் இப்படி பல பிரச்சனை இருக்கலாம். இத்துடன் சாதகமாக இல்லாத ஜாதக அமைப்பும் இருக்கலாம்.

ஐந்து சந்தர்ப்பங்களை ஒட்டி தான் வெளி நாட்டு பயணம் அமைகிறது.. பொதுவாக வேலை அல்லது தொழில் நிமித்தம் செல்வார்கள், மாணவர்கள் படிப்புக்காக செல்வார்கள், மருத்துவ சிகிச்சைக்காக செல்வார்கள் மற்ற சிலர் சுற்றுலா பயணமாக செல்வார்கள். வேறு சிலர் வெளி நாட்டில் இருக்கும் உறவுகளை சந்திக்க செல்லுவார்கள்.

ஜாதகத்தில் உள்ள கிரக அமைப்புகளை கொண்டு இவர்கள் இந்த காரணத்திற்க்காக தான் வெளிநாடு செல்வார்கள் என சொல்ல முடியும் என்றாலும் வெளி நாடு செல்ல திட்டம் இருந்தும் அதற்கான முயற்சி இருந்தும் TOFEL certification இருந்தும், இந்த வாய்ப்பு கிடைக்காமல் போகிறதே.. அந்த தடையை நீக்க என்ன செய்ய வேண்டும் என்பது தான் இந்த பரிகாரம் சொல்ல வரும் செய்தி.


ஒன்பது மற்றும் பன்னிரண்டு ஆகிய ராசிகள் ஜல ராசிகளோ வாயு ராசிகளோ இருக்க வேண்டும் என பொதுவாக சொல்லுவார்கள். குறுகிய பயணத்தை 3–ம் இடத்தை கொண்டும் நீண்டபயணத்தை 9–ம் இடத்தை கொண்டும் சொல்லலாம். ஒருவர் வெளிநாடு செல்கிறார் என்றால் 9–ம் வீட்டின் தொடர்பு இன்றி அவர் வெளிநாடு செல்ல முடியாது.

அதாவது 9–ம் வீட்டின் அதிபதி அல்லது 9–ம் வீட்டிலுள்ள கிரகங்களின் தசா, புக்திகளில்தான் ஒருவர் வெளிநாடு செல்ல முடியும். 3, 9, 12–ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகங்களின் தசாபுக்திகாலங்களில்தான் ஒருவர் வெளி நாடு செல்ல முடியும்.

9–ம் வீட்டதிபதி 2–ம் வீட்டில் இருந்தால் அயல் நாட்டுட் தொடர்பு மூலம் பணவரவு இருக்கும். 6–ம் வீட்டில் இருந்தால் வெளிநாட்டில் வேலைவாய்ப்பிற்கு யோகமுண்டு. 9–12 களில் சர்ப்ப கிரக தொடர்பு ஏற்பட்டாலும் வெளி நாடு செல்லும் வாய்ப்பு உண்டு.

எத்தனையோ முயற்சிகள் இருந்தும் வெளிநாட்டு வாய்ப்புகள் தட்டிக்கொண்டு போகிறது என்ன செய்ய என வருந்துபவர்கள், ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் வாயு புத்திர அனுமானை வெண்ணை சார்த்தி வாய்ப்பு கிடைப்பவர்கள், அனுமன் சாலிசா படனம் செய்துவர தடைகள் நீங்கி பலன் கிடைக்கும்.





மயூர வாகனத்துடன் அருள் பாலிக்கும் முருக பெருமானை வழிபாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு கிருத்திகைக்கு முன் வரும் பரணி அன்று அபிஷேகம் செய்து கிருத்திகை விரதம் இருந்து வர வெளிநாடு வாய்ப்பு விரைவில் கூடி வரும். வெளிநாட்டு பயணம் செல்ல முயல்பவர்கள் பரணி அபிஷேகம் பார்க்காமல் கிருத்திகை விரதம் இருப்பது சிறப்பு அல்ல.

“இப்படி வழிபாடு செய்வது பற்றி குறையாக சொல்லவில்லை; ஆனால் எனக்கு இப்படி வழிபாட்டில் ஈடுபாடு வரவில்லை” என சில இளைஞர்கள் சொல்கிறார்கள். அப்படி சொல்லுபவர்கள் அல்லது நினைப்பவர்கள் மிகவும் சுலபமான பதிக படனம் செய்யலாம் அல்லது இந்த திருப்பதிகத்தை ஆடியோவில் செல்போனில் பதிவு செய்து கேட்கலாம். வெளி நாட்டில் வேலை தேடும் முயற்சியில் இருப்பவர்கள் திருஞானசம்பந்தர் அருளிய

மட்டிட்ட புன்னையம் கானல் மடமயிலை
கட்டிட்டம் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

என்ற திருமயிலை திருபதிகத்தை படனம் செய்யுங்கள். எந்த காரணத்திற்க்காக வெளிநாடு செல்ல கருதுகிறீர்களோ அதற்க்கான வழிபாட்டு முறை பதிக படனம் என தனியாக உள்ளது. அதனால் அதனை உங்கள் நம்பிக்கைக்குரிய ஜோதிடரை அணுகி ஜாதகத்தை ஆய்வு செய்து விரும்பியதை பெற்று மகிழ்ச்சியுடன் வளமுடன் வாழ இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.

16

நோயின்றி வாழ செய்யும் சந்திர தரிசனம்

"இன்றைய நாளில் நோயின்றி வாழ முடியுமா ?"

இது பில்லியன் டாலர் கேள்வி தான். நோய் நாடி நோய் முதல் நாடி என்பது எல்லாம் புத்தகத்தில் மட்டும் தான் படித்து இருப்போம். என்ன செய்ய கால சூழல் இப்படி அமைந்து விட்டது. நாமும் விரும்பியோ விரும்பாமலோ அதில் சிக்கிக் கொண்டு விட்டோம்.

இன்னமும் சிலர் எனக்கு இந்த நோய் இருக்கிறது என்று சொல்வதை பெருமையாக நினைப்பார்கள். இது எல்லாம் ஜோதிடம் சொல்லும் குறிப்புகள் தான்.

ஆனாலும் நோயின் தொல்லை அதிகமாகும் போது தான் தீர்வை நோக்கி ஒடுவார்கள்.. அவர்கள் நலம் பெறவே இந்த பரிகார குறிப்புகள். எல்லா நோய்க்கும் பொதுவாக பரிகாரம் சொல்வது என்பது பொது பலன். இந்த நோய் இன்ன மருந்து என மருத்துவர்கள் சொல்வது போல ஜோதிடர்கள் சொல்லும் பரிகாரம்தான் தேவைக்கு உதவும் அருமருந்தாக இருக்கும்.

சரி, இந்த ஜோதிட குறிப்புக்கு போகலாம். ருன ரோக சத்ரு ஸ்தானம் என்று சொல்லும் இடம் தான் 6ம் பாவம். இது வயிற்றையும் குறிக்கும் அதனால் தானோ பல நோய்க்கு காரணம் நாம் எடுத்துக் கொள்ளும் உணவு என மருத்துவம் சொல்கிறது.

இந்த பாவத்தை கொஞ்சம் கவனமாக அணுகவேண்டும். அப்போ தான் எந்த நோய் அது எப்போ வந்து நம்மை தாக்கும் அதற்க்கு தீர்வு என்ன என்பதை சொல்ல முடியும்.

ரோகாதிபதி திரிகோண தொடர்பு கொண்டிருந்தாலும் தொல்லை தான் கேந்திர தொடர்பு கொண்டிருந்தாலும் தொல்லை தான். இந்த 6 ம் பாவம் எந்த பாவத்தை தொடர்பு கொண்டுள்ளது என்பதை வைத்து அவருக்குள்ள நோய் எப்படி வரும் என்பதை சொல்லலாம்.

உதாரணமாக இந்த பாவம் இரட்டைப்படை பாவங்களை தொடர்பு கொண்டால் **food poison** என்பார்களே அந்த வகையில் உண்ணும் உணவால் நோய் வரலாம் என சொல்ல முடியும். உரிய தசா புத்திகள் நடக்கும் போது அவை வெளிப்படும். 6க்கு உரியவன் 12ல் இருந்தால் எப்படி தூக்கம் வரும். இந்த ரோகாதிபதி பாவியாக இருந்தால் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் இல்லையா.

நோயின் பட்டியல் பெரியதாக இருக்கிறதே அத்தனையையும் ஜோதிடத்தில் காட்ட முடியுமா ? இன்னமும் புதியதாக சில நோய் வருகிறதே இதை எப்படி ஜோதிடத்தில்.... என யோசிக்க வேண்டாம்.

“இல்லாது தோன்றாது. உள்ளதே சிறக்கும்” என்பது தான் சாத்திர விதி. நோய் வெளிப்ப்படும் போது இவை எடுத்து காட்டப்படுகிறது அவ்வளவு தான்.

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்

வாய் நாடி வைப்ப செயல்

என்ற வள்ளுவம் சொல்வது போல நோயின் தன்மையை அறிந்து அதற்குரிய பரிகார குறிப்புகள் சொல்லும் போது பலன் கிடைக்கிறது என்பது தான் நிஜம்.

எந்த நோயும் இருப்பதாக வெளியில் தெரியவில்லை என்பவர்களும் ஏதாவது ஒரு நோய் இருப்பவர்களும் குறிப்பாக ரத்த கொதிப்பு உள்ளவர்களும் மிக சுலபமாக செய்ய கூடிய பரிகாரம் இது தான். அது சந்திர தரிசனம்.

மூன்றாம் பிறை என்று வழக்கத்தில் சொல்லுவார்கள். அமாவசையை தொடர்ந்து வரும் 3ம் நாள் கதிர் விலகும் நேரத்தில் வெளிப்படும் மாலையில் சந்திர தரிசனம் செய்ய வேண்டும். இதை

தொடர்ந்து வாழ் நாள் முழுதும் செய்து வந்தால் டானிக் சாப்பிடுவது போல் நோய் பாதிப்பு இன்றி இருக்கலாம். அதனால் தான் சதாபிஷேகம் செய்து கொள்பவர்களை ‘ஆயிரம் பிறை கண்டவர்’ என உயர்த்தி பேசுவார்கள்.

பிறை காணும் நாளில் திங்கட்கிழமை வரும் நாள் அல்லது ரோகிணியில் வரும் நாள் சிறப்பு. அப்போதெல்லாம் சூரிய அஸ்தமனத்திற்க்கு முன் பின் ஒரு மணி நேரம் மவுனம் இருத்தல் ரத்த கொதிப்பை சம நிலை படுத்தும் என்பதை நீங்களே ஆய்வு செய்து பார்த்துக் கொள்ளலாம்.

நாங்கள் அலுவலகம் செல்பவர்கள், இரவு நேர பணியில் இருப்பவர்கள், எங்களால் இது முடியாதே வேறு உபாயம் சொல்ல முடியுமா என கேட்பவர்கள், மதுரையை அடுத்து செல்லூர் பாலம் அருகில் உள்ள திருஆப்பனூர் இறைவனை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தரிசனம் செய்து வாருங்கள்..

இந்த தலத்தை குறிப்பாக இங்கே சொல்ல காரணம் மூட்டு வலி (ஆர்தரிடிஸ்) யால் சிரம படுபவர்கள் இந்த திருத்தலத்தை முறைப்படி வலம் வந்தால் அவர்கள் வாதம் மற்றும் மூட்டு வலி தொல்லையில் இருந்து நிவாரணம் பெறுவார்கள்.

இதற்கும் வாய்ப்பு இல்லாதவர்கள் இந்த திருத்தல பதிகமான

முற்றும் சடைமுடிமேல் முதிரா இளம் பிறையன்
ஒற்றைப் பட அரவம் அது கொண்டு அரைக்கு அணிந்தான்
செற்றம் இல் சீரானைட் திருஆப்ப னூரானைப்
பற்று மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே.

என்ற சம்பந்தர் அருளிய திருப்பதிகத்தை படனம் செய்து வரலாம்.

ஒரு நோய்க்கு ஒரு மருந்து அல்ல. ஒரு மருந்து ஒரு நோய்க்கு அல்ல. அது போல ஒரு பரிகார குறிப்பு ஒரு நோய்க்கு அல்ல. ஒரு

நோய்க்கு ஒரு பரிகார முறை அல்ல என்பதை கவனத்தில் வைக்க வேண்டும். பரிகாரம் செய்தால் போதுமா மருத்துவம் வேண்டாமா என்றும் சித்திக்க கூடாது. பரிகார முறையுடன் நோய்க்கான மருத்துவ ஆலோசனையும் பெற்றால் நோயில் இருந்து விடுதலை பெறுவது சுலபம்.

அதனால் உங்கள் நம்பிக்கைக்குரிய ஜோதிடரை அணுகி ஜாதகத்தை ஆய்வு செய்து நோய் தணிக்கும் செயலை அறிந்து ஆரோக்கியமுடன் நலமாக வாழ இறைவனை வேண்டுகிறோம்



17

விரிசல் இல்லா வாழ்க்கைக்கு வழிகாட்டி

"என்னென்னு தெரியலை, எனக்கு அவனை கண்டாலே பிடிக்கலை" என்று ஆரம்பிப்பவர்களை பற்றி சொல்லும் முன் அவுங்க சொல்ற காரணம் தான் நமக்கு வியப்பாக இருக்கும்.

"ஏம்மா காதல் பண்ணி தானே கட்டிகிட்டே... இப்போ இப்படி சொல்றீயே..." என காரணம் கேட்டால் அவர்கள் உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கும். தாமதமாக அவர்களால், புரிந்து கொண்டாலும், அதை ஏற்றுக்கொள்ள போலி கவுரவம் 'எடுத்த முடிவை பின் வாங்குவதா' என தடுக்கும்.

அடுத்து என்ன செய்ய போகிறோம் என தெரியாமல் முடிவு எடுக்கும் இன்றைய இளைய தலைமுறைகள் விவாகரத்து பற்றி பேசுவது வெட்கமாக மட்டும் இல்லை வேதனையாகவும் இருக்கிறது. விவாகரத்து என்பது இன்றைய நாளில் சட்டமும் எளிமையாக உள்ளது இவர்களுக்கு சாதகமாவும் போய்விடுகிறது.

ஊடலும் கூடலும் இணைந்து இருப்பது தான் தாம்பத்யம் அதை தான் பண்டை தமிழும் சொல்லும். ஆனால், இன்றைய நிலையில் பெண்களுக்கு சகிப்பு தன்மை இருப்பதில்லை. ஆண்களுக்கு பொறுமை இருப்பதில்லை. இதன் விளைவு குடும்ப நீதிமன்றம் . இந்த விவாகரத்து 'சாதனையா..' 'வேதனையா..' என்று வருந்துவது பெற்றோர்களும் உற்றோர்களும் தான்.

இன்றைய நாளில் மேட்ரிமோனிகள் அதிகமாக வந்து விட்டது. இப்போது செகண்ட் மேட்ரிமோனிகள் வர துவங்கிவிட்டன என்பது வளர்ச்சிக்கான செய்தியாக இல்லை. வருத்தமான செய்திகள் தான் என்ன செய்வது.

சரி, விவாகரத்து ஏற்படுவதற்க்கான ஜோதிட குறிப்புகளை குறித்துக் கொள்ளுங்கள். பெண்கள் ஜாதகத்தில் 7ம், 8ம் ஆரோக்கியமாக இல்லை என்றால் விவாகரத்து ஏற்படும் சூழல் இருக்கும். லக்கினாதிபதியோ 7க்கு உடையவரோ மறைவிடத்தில் இருந்தாலும் விவாகரத்து சுலபமாக அமையலாம்.

12ல் ராகு இருந்தாலும் 7ல் உள்ள நீசரை சுபர் பார்த்தாலும் ராகு கேது அச்சில் குரு சுக்கிரன் பிரிந்து இருந்தாலும் விவாகரத்து அமைய வாய்ப்பு உண்டு.

இது போன்ற அமைப்பு உள்ளவர்கள் தொடர்ந்து சில பரிகாரங்களை செய்து வர வேண்டும். மற்ற அமைப்புகள் சாதகமாக இருந்தால் மணமுறிவுகளை தவிர்க்கலாம். இந்த மனமுறிவுகளை தவிர்க்க முடியாதவர்கள் இது போன்ற சிந்தனைக்கே வர மாட்டார்கள் என்பது தான் நிதர்சனம், அதை அவரவர்கள் தங்கள் அனுபவத்துடன் வைத்து சரி பார்த்துக் கொள்ளவும்.



எனக்கு என்ன தீர்வு என விரும்பி கேட்பவர் களுக்காக இந்த பரிகாரம் சொல்லபடுகிறது. பொதுவாக அர்த்தனாரிச்வரர் வழிபாடு செய்ய பரிந்துரை செய்வார்கள். இது மணமான பின்னர் செய்வது இன்றைய வழக்கமாக உள்ளது.

இங்கு அடியேன் தேர்வு செய்து சொல்வது திருமண நிலையில் இருப்பவர்களும் அதற்க்கு முன் நிலையில் இருப்பவர்களும் உதவும்.

மயிலாடுதுறை அருகில் உள்ள தென்னலக்குடி என்ற திருத்தலத்தில் அருள் பாலிக்கும் பக்தபீஷ்டப்ரதாயினி சமேத மனோக்கிய நாதசுவாமியை தரிசனம் செய்ய வேண்டும்.

இந்த திருமேனிக்கு சுத்தமான ரசாயன கலப்பு இல்லாத நல்லெண்ணெயில் அபிஷேகம் செய்ய வேண்டும். (செக்கு எண்ணை பயன்படுத்திக் கொள்ளலாம்) இந்த திருமேனியில் எத்தனை எண்ணை தேய்த்தாலும் அது உறிஞ்சு கொள்ளும் அற்புதமான சிறப்பு பெற்றது இந்த திருத்தலம்.

இந்த அபிஷேக நல்லெண்ணெய் வாங்கி வில்வம் சார்த்தி அதனை குடித்து விடலாம். குமட்டலோ எரிச்சலோ வராது. அத்துடன் இங்கு பிரகாரத்தில் உள்ள பிலா மரத்தை கட்டி அணைத்து பிரார்த்தனை செய்ய வேண்டும். இப்போது மேடை கட்டி இருப்பதால் இதற்க்கு வாய்ப்பில்லை. அதனால் மனதால் நினைத்து மரத்தை கட்டுவது போல் பாவித்து விருட்ச ஸ்பரிசம் பெறுவதற்காக இம்மரத்து இலையை மடியில் கட்டிக் கொள்ளலாம்.

இதனை விவரமாக சொல்லி பெண் பிள்ளைகளை அழைத்து செல்வதாக இருந்தால் அவர்கள் வர மறுக்க வாய்ப்பு உண்டு. அதனால் திருக்கோயில் வழிபாடு என்று சொல்லியே அழைத்து செல்லுங்கள். இங்கு செல்ல வாய்ப்பில்லை என வருந்துபவர்கள் திருஞானசம்பந்தர் அருளிய

அயில் ஆரும் அம்பு அதனால் புரம்மூன்று எய்து
குயில் ஆரும் மென்மொழியாள் ஒருகூறுஆகி,
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கு இல்லை, பாவமே.

திருமணஞ்சேரி திருப்பதிகத்தினை முழுவதும் தினமும் காலை மாலை என இரு வேளையிலும் வாழ்நாள் முழுதும் படனம் செய்து வரவேண்டியது அவசியம். இது நல்ல பலனை பெற்று தரும்.

காரமான உணவு பொருட்கள் துரித உணவுகள் பெருங்காயம் சேர்த்த உணவுகள் அஜினோமோட்டோ உள்ள உணவுகள் முதலியவற்றை முழுவதும் தவிற்க வேண்டும். அசைவ பிரியர்கள் கோழி, முட்டை தொடர்பான உணவுகளை தவிர்க்க வேண்டும். முளை கட்டிய பச்சை பயிரை எடுத்துக் கொள்ளலாம்.

எனக்கு இந்த அமைப்பு இருக்கிறதா என்று நீங்களே கற்பனை செய்து கொண்டு அமைதி இழப்பதை தவிருங்கள். உங்கள் நம்பிக்கைக்குரிய ஜோதிடரை அணுகி உங்கள் ஜாதக நிலையையும் வரப்போகும் வாழ்க்கை துணை எப்படி இருப்பார்கள் என்று அறிந்து கொண்டு நலமுடன் வளம் பெற்று வாழ வாழ்த்துகிறோம். மணமானவராக இருந்தால் மாற்று வழிகளையும் ஜோதிட ஆலோசனையையும் பெற்று நலமுடன் வாழ இறைவன் திருமுன் வேண்டுகிறோம்.



18

வழக்கில்லா வாழ்க்கைக்கு வழி

சிலருக்கு இப்படி தான் வாழ்க்கை இருக்கும். எப்போதும் ஏதாவது வழக்கு இருக்கும். சிலருக்கு ஆயுள் முழுதும் ஏதாவது ஒரு வழக்கு இருக்கும். இப்படி தினம் தினம் வழக்குகளுடன் வாழ்க்கை நடத்துவார்கள்.. இன்னும் சிலரோ, ஒரு வழக்கு ஏதாவது வழக்கு வந்தாலே.. தினமும் தூக்கம் கெட்டு, மன அழுத்தத்தில் இருப்பார்.

இன்னமும் சிலரோ தேவையில்லாமல் வழக்கு போட்டு மற்றவர்களை வம்புக்கு இழுப்பார்கள். எப்படியோ வழக்கு என வந்து விட்டால் அதில் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்று நினைப்பவர்களும் உண்டு. நமக்கு என்ன என யாராலும் வழக்கு வந்தால் சும்மா இருக்க முடியுமா ? அது பொய் வழக்காக இருந்தாலும் அதை தள்ளியோ காலம் தாழ்த்தவோ முடியாது. சரி.. யாருக்கு எல்லாம் இந்த வழக்கு வரும். என்றும் அதை சமாளிக்க பரிகார குறிப்பும் என்ன என்பதை பார்க்கலாம்.

6, 8, 12க்குரியவர்கள் 10–ல் இருந்தால் வம்பு–வழக்குகள் வரும். 2க்குரியவன் குரு, புதன், சுக்ரனோடு ஒன்றுசேர்ந்து மறைவிடங்களில் இருந்தால், பொருள் மற்றும் பணம் பற்றிய வழக்குகள் இருக்கும்.

ராகுவும், சூரியனும் 7–ல் இருந்தால், பெண்கள் வழி வழக்குகள் வரலாம். சந்திரனோடு சர்ப்ப கிரகம் சேர்ந்தால், வழக்குகளால் விரயமாகும் நிலை ஏற்படும்.

லக்னாதிபதி பலமில்லாது லக்னத்தில் பாபியும் இருந்து விட்டால் அவ்வளவு தான் வழக்குகளால் உடல் நல குறைபாடும் தேவையில்லாத கவலையும் உருவாகும்.

3 மற்றும் 4–ம் வீட்டுக்குரியவன் பலமிழந்தால், அந்த கிரகத்தின் தசை வரும் போது, உடன்பிறந்தோருடன் சொத்து விஷயமாக பிரச்னைகளும் பிரிவுகளும் ஏற்படும்.

6–ம் குரியவன் பலம் இழந்து தசை நடத்தும் போது... (அறி)முகம் தெரியாதவர்கள் மூலம் வழக்கு மற்றும் சொத்துக்கள் இழப்பும் இப்படி இருக்கலாம்.

10–க்கு உரியவன் பலவீனமானால் அந்த தசை நடக்கும் போது எல்லைப் பிரச்னை தொடர்பான வழக்குகளும் இழப்புகளும் வரலாம்.

12–ம் வீட்டுக்குரியவன் பலமிழந்து தசை நடந்தால் அது சமயம் வழக்குகளுக்கு பயந்து வெளிதேசத்துக்குச் செல்ல நேரிடும். அதன் தொடர்பாக சொத்துக்கள் பறிபோகவும் வாய்ப்பு உண்டு.

12 ம் அதிபதி பலம் இழந்து 9–ம் அதிபதி பன்னிரண்டில் அமர்ந்தாலும் கடன்பட்டு வழக்கை நடத்திச் செல்ல வேண்டி இருக்கும்.

இப்படி வழக்கு வந்து விட்டதே என வருந்த வேண்டாம். ஒவ்வொரு விதமான வழக்கிற்கும் ஒவ்வொரு விதமான பரிகாரம் உண்டு. என்றாலும் எல்லோரும் எளிமையாக புரிந்து கொண்டு மாற்று வழி தேடினால் வெற்றியே கிடைக்கும்.

மதுரையை அடுத்த சோழவந்தான் பகுதியில் உள்ளது திருவேடகம் என்ற ஊர். இங்கு ஏலவார்குழலி உடனுறை ஏடகநாதர் திருக்கோயிலில் அதிகாலை அபிஷேகம் செய்து புதிய வஸ்த்திரம் சார்த்தி வாழிபாடு செய்ய வேண்டும்.தொடர்ந்து (1+16) 17–வாரங்கள் தொடர்ந்து செய்து வந்த பின் மதுரையை சுற்றி நான்கு திசைகளிலும் உள்ள திருக்கோயில் வழிபாடு செய்து வந்த பின் வழக்கில் திருப்பம் ஏற்படும். எந்த நிகழ்வால் வழக்கு வந்தாலும் இந்த பரிகாரம் செய்யலாம்.

இதே போல் முறைப்படி வேல் அர்ச்சனை தொடர்ந்து செய்து வர வழக்குகள் சாதகமாகவும் விரைவாகவும் முடியும். சிலருக்கு சித்தர் சாமதிகளுக்கும் அதிஷ்ட்டானங்களுக்கும் சென்று பிரார்த்தனை செய்தாலும் அமைதியும் தீர்வும் கிடைக்கும்.

பெண்களால் வந்த வழக்கு என்றால் கண்ணாடி பயிற்சி செய்யலாம். இப்படி ஒவ்வொரு வித வழக்கிற்கும் சரியான பரிகாரம் தேர்வு செய்து நம்பிக்கையுடன் செய்து வந்தால் பயன் கிடைக்கும். எல்லோருக்கும் வசதியாக திருஞானசம்பந்தர் தன் திருக்கரத்தால் எழுதி அமைத்த

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம்அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

என்ற இந்த திருப்பாசுரத்தை தினமும் படனம் செய்து வந்தால் மனதில் மாற்றம் மற்றும் அமைதி வரும். உங்கள் நம்பிக்கைக்குரிய ஜோதிடரை அணுகி ஜாதகத்தை ஆய்வு செய்து வாழ்கின் நிலை அறிந்து தீர்வு பெற்று வாழ இறைவனை வேண்டுகிறோம்.



19

பலன் தருமா பரிகாரம்

பரிகாரம் ஏன் செய்ய வேண்டும் என்பதற்க்கான சில சிந்தனைகளை சொன்னால் இந்த பரிகார தொடரின் நோக்கமும் செயலும் எளிதாக மனதில் பதியும்.

நம்முடைய செயல்கள் அனைத்தும் கர்ம வினைகளாக விளையும். அது நல் வினைகளாகவும் இருக்கலாம். தீவினை களாகவும் இருக்கலாம். இந்த வினைக் குவியலின் செயல்பாடுகள், செயல்பாட்டிற்கு வரும் போது தான் நாம் அடைகின்ற இன்பமோ அல்லது துன்பமோ அமையும். அந்த வினைகளை அனுபவிக்கும் போதே இன்னும் சில வினைகளையும் செய்கிறோம். அதன் வினைப்பயன் வரும் காலங்களில் விளையும்.

எல்லோராலும் நாம் செய்த அத்தனை வினைகளையும் எடுத்த இந்த ஒரு பிறவியிலேயே அனுபவித்து தீர்க்க முடியாது. (அவ்வளவு வினைகள் செய்து இருக்கிறோம். செய்து வருகிறோம்)

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா

பிற்பகல் தாமே வரும்

என்பது தானே திருக்குறள். ஆனாலும் எந்த வினைகள் முதலில் வரும் எது பின்னால் வரும் என எப்படி தெரிந்து கொள்வது என்ற ஆவல் நம்மில் எல்லோருக்கும் உண்டு தானே. அதை வெளிகாட்டும் கருவி தான் பிறப்பு ஜாதகம்.

இந்த ஜாதக குறிப்புகளில் இருந்து எந்த வினை பயன் எப்போ நடக்கும் என்பதை தெரிந்து கொள்ள முடியும். இந்த வினைப்பயனை தருபவர் இறைவன். அந்த வினைப்பயனுக்கான ஆணையை செயல்படுத்தும் அலுவலராக இந்த கிரகங்கள் செயல்படும்.

அதனால் தான் ஜாதக குறிப்புகளை கொண்டு எந்த வினை எப்போ நிகழும் என்று திறமை பெற்ற ஜோதிடர்களால் சொல்ல முடியும். அந்த கிரகங்கள் நகர்வதை கொண்டே நமக்கு எந்த வினை முதலில் வரும்.. எந்த வினை பிறகு வரும் என அறிய முடியும்..

நம்முடைய வினைகளை பார்க்க வேண்டுமானால் ஒரு பெரிய பூகோள மூட்டையே இருக்கும்... அதனால் அதில் இருந்து எந்த வினை முதலில் வரும் என தெரியவேண்டாமா அதற்க்கு தான் ஜோதிடம் பார்க்க வேண்டும்..

அதெல்லாம் சரி தான் ஐயா. நாம் ஏன் பரிகாரம் செய்யணும். அப்படி பரிகாரம் செய்தால் எப்படி இந்த வினை பயனில் இருந்து விடுதலை பெற முடியும் என்பது தான் உங்கள் கேள்வியாக இருக்கும் இல்லையா ?

இறைவன் திருக்கருணை நிறைந்தவர். இது விதிக்கப் பட்டது. இதை அனுபவித்து தான் தீர்க்க வேண்டும். என்று சொல்வது இறைவன் கருணை இல்லாதவன் என்று சொல்வது போல் ஆகி விடும். உயிர்களின் இயல்பே தவறு செய்வது தான். அந்த தவறுக்குக் வருந்தி திருந்தினால் எந்த உயிருக்கும் கருணை நிறைந்த இறைவன் நல் வழி காட்டுவான். இதனை திருக்குறள்

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று

இப்படி சொல்லும் போது நம்மால் மறுக்க முடியுமா ? கடவுள் கொள்கையில் மாற்று கருத்து உள்ளவர்கள் கூட இதை மறுக்க மாட்டார்கள்.

அதனால் தான் நாம் அதனை “பரிகாரம்” என்று நமக்கு தெரிந்த மொழியில் சொல்லிக் கொண்டு செய்த வினைகளுக்கு வருத்தம் தெரிவித்து வழிபாடு செய்கிறோம். கர்ம வினைகளை

அனுபவிக்க வேண்டிய ஆணை போடுபவன் இறைவன், அதனை செயல்படுத்துபவர்களே கிரகங்கள்.

எனவே தான் யார் ஆணையிட்டார்களோ அவர்களிடமே போய் செய்த வினைகளுக்கு வருத்தம் தெரிவித்து ஆணையை மறு பரிசீலனை செய்ய வேண்டுதல் வைக்கிறோம். அது தான் பரிகாரம்.

யார் ஆணையினை போட்டார்களோ அவர்களால் மட்டும் தான் ஆணையை மாற்ற முடியும். இது இன்றும் நடைமுறை வாழ்க்கையில் உள்ளதை நாம் அனுபவத்தில் அறிய முடியும். அதனால் தான் ஆணை இட்ட ஆண்டவனிடம் நாம் செய்யும் வழிபாடு அல்லது பரிகாரம் மூலம் அந்த ஆணை மாற்ற படலாம்.

அதனால் தான் அதனை செயல்படுத்தும் நவ கிரகங்கள் அவர்கள் வைத்திருக்கும் ஆணை என்ன என்பதை ஜோதிடர்கள் ஜாதகம் வழி அறிந்து கொண்டு ஆணையிட்டவரிடம் முறையீடு செய்ய ஆலோசனை சொல்கிறார் (அது தான் பரிகாரம்).

வருந்தி முறையீடு செய்வதால் அந்த ஆணை மாற்ற படும் போது பரிகாரத்தினால் பயன் கிடைக்கிறது என நம் மொழியில் சொல்லி புரிந்து கொள்ள முடிகிறது. செய்த வினைகளுக்கு கழுவாய் இல்லை என்றால் இறைவனை கருணை அற்றவன் என்று சொல்லும் பாவத்திற்கு நாம் ஆட்படுவோம்.

"அல்லல் என் செய்யும் அருவினை என் செய்யும்"
என்பது அப்பர் வாக்கு.

"அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே"
என்பது சம்பந்தர் வாக்கு

"நாள் என் செய்யும் வினை தான் என் செய்யும்"
என்பது கந்தர் அலங்காரம்.

மாதமும் தினம் வாரமும் திதி யோகமும் பல
நாள்களும் படர் மாதிரம் திரி கோள்களும்,
கழல் பேணும் அன்பர்கள் பால் நலம் தர
பாம்பன் சுவாமிகள்

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி
தாளாது உஞற்று பவர் குறள்.620
திருவள்ளுவர்.

இப்படி பெரியவர்கள் சொல்லும் போது எல்லா பிரச்சனைக்கும் தீர்வு உண்டு என்பதை உணர முடிகிறதா? அதை நாம் முறைப்படி செய்கிறோமா என்பதில் தான் நம் அறிவு செயல்படுகிறது. அதனால் பரிகாரங்களுக்கு கட்டாயம் பலன் உண்டு.

நாம் சொல்லும் பரிகார முறை தொடரின் முதல் பகுதியில் சொன்னது போல ஒழுக்க முறை, தமிழ் பாடல், விருட்ச ஸ்பரிசம், உணவு பழக்கம், ஆலய தரிசனம், இது தவிர சில சடங்குகள் என்ற வகையில் இருக்கும்.

ஞானம் பெற்ற ஜோதிடர்கள் ஒவ்வொரு நிலைக்கும் தனி தனியாக பிரித்து சொல்லும் பரிகாரங்களை நம்பிக்கையுடன் செய்தால் பரிகாரம் நிச்சயம் பலன் தரும். அதனால் தான் அவைகளை பலன் தரும் பரிகாரம் என்று இது வரை ஒவ்வொன்றாக இந்த தொடரில் வாசகர்களின் நல்லாதரவுடன் பார்த்தோம்.

அதனால் பரிகாரங்களை பரிகாசம் செய்யாமல் சொன்னபடி சொன்னதை செய்தால் பலன் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

நல்லதே நடக்கும்

நலம் பெற வேண்டுகிறோம்

நல்வாழ்த்துக்கள்.

நூலாசிரியர் பற்றி...

விசு அய்யர் தமிழ்நாட்டில் உள்ள வீரம் செறிந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில் உள்ள சிறப்பு மிக்க சிவகங்கை சீமையில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி என இந்துக்களால் கொண்டாடப்படும் கண்ணன் பிறந்த நன்நாளில், உலக எழுத்தறிவு தினமாக இப்போது இந்தியாவில் கொண்டாடப்படும் தினத்தில் தோன்றியவர்.



வரி சட்டத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். பள்ளி நாள் முதல் தொடர்ந்து சிறந்த மாணவனாக தேர்ந்து எடுக்கப்பட்ட இவர் இந்திய அளவிலான நினைவு திறன் போட்டியிலும்,. தேசிய அளவிலான அதிவேக தட்டச்சு போட்டியிலும் வெற்றி பெற்றவர். சித்தாந்த ரத்தனா, திருவருட் செல்வர், கைரேகை கலைஞன், போன்ற இவர் பெற்ற பாராட்டுக்களும் நன்மதிப்பும் பெருமைக்குரியன.

இன்று வரை உண்மையான பிரம்மச்சரிய வாழ்க்கையில் உணவிலும் உணர்விலும் இயற்கையோடு இயைந்து வாழும் சீரிய ஒழுக்கத்தை கொண்டவர் .

பெரியபுராணம், திருக்குறள், மற்றும் சைவதிருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர். வார மற்றும் மாத இதழ்கள் மற்றும் பல ஆய்வு கட்டுரைகளும் பதிப்பித்து உள்ளார். அரிமா சங்கம், சுழற்சங்கம், அறிதுயில் சங்கம் மற்றும் குடும்ப நற்பணி மன்றங்களில் போன்ற பல இடங்களில் உரை நிகழ்த்தி உள்ளார்.

உடலாலும் உள்ளத்தாலும் சீரிய ஒழுக்கத்தினாலே இன்றும் இளைஞராகவே இருகின்றார். சொந்த வாழ்க்கையில் மட்டுமின்றி நடைமுறை வாழ்க்கையிலும் ஒரு ஒழுக்க முறையினை செயல்படுத்தும் இவர் கையில் திருக்குறளும், பையில் திருநீறும், மெய்யில் உருத்திராக்கமும் இருக்கும் என்பதே இவரின் எளிய அடையாளம்.

இவரின் எண்ண கருத்துக்களை நூலாக்கி படைப்பதில் பதிப்பாளராக பெருமை கொள்கிறோம்.

பதிப்பாளர்

ஸ்ரீராம் குழுமத்தின் சேவைகள்

ஜோதிட ஆய்வுக்கு	ஸ்ரீ ராம் வாட்ஸ் அப் குழு,
ஜோதிட ஆலோசனைக்கு	ஸ்ரீ ராம் ஜோதிட கேந்திரா
நவரத்தின ராசி கற்களுக்கு	ஸ்ரீ ராம் ஜோதிட கேந்திரா
இலவச மின்னிதழுக்கு	ஸ்ரீ ராம் ஜோதிடம், மாத இதழ்.
ஜோதிட வகுப்புக்கு	ஸ்ரீ ராம் ஜோதிட பயிற்சி பள்ளி
ஜோதிட சானலுக்கு	ஸ்ரீ ராம் ஜோதிட சானல்.

தொடர்பு முகவரி JVV.பொன்தாமரைக்கண்ணன்
ஸ்ரீராம் ஜோதிட கேந்திரா
கொடுமுடி 638 151
ஈரோடு மாவட்டம்

அலைபேசி : 7667745633
வாட்ஸ்அப் : 7667745633
மின்னஞ்சல் : sriraamjodhidam@gmail.com
skype : astrokanna@gmail.com
facebook : www.facebook.com/groups/astro.v.kanna/
: www.facebook.com/astro.v.kanna
URL : https://astronames.blogspot.in

இந்த நூலை பணம் செலுத்தாமல் நீங்கள் பெற்றுள்ளவரா ?

ஆம் என்றால் அந்த பாவச் செயலை நாம் செய்ய வேண்டாமே

நூலுக்கு உரிய தொகையை விருப்பம் போல் அனுப்பலாம்

Paytm Accepted Here

sriraam jothida kendra

To Pay, Scan QR Code in Paytm App

India's Most Sincere Bank

Paytm Payments Bank

Bank Account No.

286801000000995

favouring ANITHA

IFSC: IOBA0002868

அலைபேசி எண்.7667745633

குறிப்புகளுக்காக...

குறிப்புகளுக்காக...

பலன் தரும் பரிகாரங்கள்

பாகம் -1

